

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் 74

இதழ் 3-4





## குருபூசை மலர்

விரோதி ஹூ - பங்குனி மீ
விகிர்தி ஹூ - சித்திரை மீ
(2010 மார்ச்- ஏப்ரல்)

ஆதரித் தழைத்தால் அதெந்துவே
என்றரு ளாயே

திருச்சிற்றம்பலம்

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே

திருச்சிற்றம்பலம்

-மாணிக்கவாசகசுவாமிகள்-





சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்

சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கை

| பொருள் | காலம் | நாள் | நேரம் | இடம் |
| --- | --- | --- | --- | --- |
| யாகம் | 07-03-2010<br>04-04-2010 | ஞாயிறு<br>ஞாயிறு | காலை 8.00<br>மணிமுதல் | சிவதொண்டன் நிலையம்<br>யாழ்ப்பாணம் |
| ஆயிலியம் | 26-03-2010<br>23-04-2010 | வெள்ளி<br>வெள்ளி | நண்பகல் | யாழ்ப்பாணம்<br>சிவதொண்டன் நிலையம் |
| | | | பிற்பகல் | செங்கலடி<br>சிவதொண்டன் நிலையம்<br>கொழும்புத்துறை ஆச்சிரமம் |

- நிகழும் மாசித்திங்கள் 29ம் நாள் சனிக்கிழமை (13-03-2010) மகாசிவராத்திரி விரதம் சிவதொண்டன் நிலையங்களில் அனுட்டிக்கப்படும். விரிவான அறிக்கையினை உட்புறத்தில் பார்க்கவும் (குறிப்பு: கடந்த இதழில் 14-03-2010 அன்று மகாசிவராத்திரி நாள் என்று குறிப்பிடப்பட்டது இங்கு திருத்தப்பட்டுள்ளது)

- எதிர்வரும் பங்குனித்திங்கள் முதலாம் நாள் திங்கட்கிழமை (15-03-2010) அன்று செங்கலடி சிவதொண்டன் நிலையக் கால்கோள் விழா நடைபெறும். அன்றுகாலை 9.00 மணிமுதல் அபிடேக ஆராதனை நிகழும்.

- எதிர்வரும் பங்குனி இரண்டாம் திங்கள் (22-3-2010) திருவடி பூசைத்தினம். அன்றுமாலை இரு சிவதொண்டன் நிலையங்களிலும் திவ்வியமான அபிடேகம் நிகழும்.

- எதிர்வரும் பங்குனி ஆயிலிய நாள் (26-3-2010) எங்கள் குருநாதன் யோகசுவாமிகளது குருபூசை நாள். அன்று யாழ் சிவதொண்டன் நிலையத்திலும் கொழும்புத்துறை சமாதிக் கோயிலிலும் குருபூசை சிறப்புடன் கொண்டாடப்படும். குருபூசைக்கு முந்திய மூன்று நாட்களும் ஆச்சிரம வாழ்வு நாட்கள். இந்நாட்களில் நற்சிந்தனை முற்றோதல் நிகழும்.

# பொருளடக்கம்


**விடயம்** **பக்கம்**

1) தானாக்கி மலரடிக்கீழ் வைக்கும் அருட்குரு....33
2) அப்பரும் அம்மையப்பரும்....34
3) மோனத்தேன் குடித்த கனேடியத் தேன்வண்டு....37
4) இன்பம்....40
5) கண்டேன் அவர் திருப்பாதம் ....42
6) ஆசான் அருள்மொழிகள்: நோக்கமொன்றற நிற்றற்கான நோக்கு....45
7) மழலை மந்திரம்....47
8) எங்கள் குருநாதனது அநுபவசித்தாந்தம்....51
9) சிவசிந்தனை....55
10) குருமணி (ஆசிரியர்)....56
11) நற்சிந்தனை ....57
13) Positive Thoughts *for Daily Meditation*....59
14) Real Guru & real Sishya....60
15) Spritual Story....61
16) Saiva Saints....62


சிவதொண்டன் ஆசிரியரின் மின்னஞ்சல்: editorsivathondan@ymail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்தம் உபசாந்தம் சர்வம் பிரம்மமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரி பூசை பிரார்த்தனை ஒழுங்குகள்

***நிகழும் மாசித்திங்கள் 30ம் நாள் (13–03–2010) சனிக்கிழமை சிவதொண்டன் நிலையங்களில்***

**மகாசிவராத்திரி விரதம்** அனுட்டிக்கப்படும்

அவ்வமயம் பின்வரும் ஒழுங்கின்படி பிரார்த்தனையும் பூசையும் நடைபெறும்.

**ஒழுங்குகள்: புராண மண்டபம்**

*முதற்சாமம்*

**பூசனை**
**விநாயகரகவல்**
**திருவெழுகூற்றிருக்கை**
**எங்கள் குருநாதன்**
**அந்தமும் ஆதியும்**
**சிவபுராணம்**
**திருமுறை ஓதுதல்**
**நற்சிந்தனை**

*இரண்டாம் சாமம்*

**பூசனை**
**கீர்த்தித்திருவகவல்**
**திருமுறை ஓதுதல்:**
**இலிங்கபுராணக் குறுந்தொகை**
**நின்ற திருத்தாண்டகம்**
**அடிமுடிதேடுபடலம்**
**நற்சிந்தனை**

*மூன்றாம் சாமம்*

**பூசனை**
**திருவண்டப்பகுதி**
**திருமுறை ஓதுதல்:**
**திருத்தொண்டத் தொகை**
**நற்சிந்தனை**

*நான்காம் சாமம்*

**பூசனை**
**போற்றித்திருவகவல்**
**திருமுறை ஓதுதல்:**
**கோயிற்றிருப்பதிகம்**
**நற்சிந்தனை**
**திருப்பள்ளியெழுச்சி**

**தியான மண்டபம்: மௌனம் சும்மா இருத்தல்**

**ஞாயிற்றுக்கிழமை (14-03-2010) காலை 8.00 மணிமுதல் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்திலும், செங்கலடி சிவதாண்டன் நிலையத்திலும் மாகேசுரபூசை நடைபெறும்**

*இங்ஙனம்*
*சிவதொண்டன் சபையார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

விரோதி ௵ பங்குனி ௴ - விக்ருதி ௵ சித்திரை ௴

மலர் 74 (2010 மார்ச் - ஏப்ரல்) இதழ் 3-4


உ

## தானாக்கி மலரடிக்கீழ் வைக்கும் அருட்குரு

மன்னவன்தன் மகன்வேட ரிடத்தேதங்கி வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்ப
பின்னவனும் என்மகனீ யென்றவரிற் பிரித்துப் பெருமையொடும் தானாக்கிப் பேணுமாபோல்
துன்னிய ஐம்புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையும் அறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்து அவரின் நீக்கி மலமகற்றித்தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்

—சிவஞானசித்தியார்—

பொருள்:

அரசகுமாரன் ஒருவன் (இளமைப்பருவத்து மறைவாகி) வேடரிடத்திலே அகப்பட்டு அவரோடுகூடி இழிதொழில் செய்து வளர்ந்து (பருவம் வந்த பின்னரும்) தனது தந்தையாகிய அரசனையும் தன்னையும் அறியாது மயங்கி இருந்தான். அந்நிலையில் அரசன் அவனைக்கண்டு நீ எனது மகன் என்று அறிவுறுத்தி அவ்வேடரினின்றும் அவனைப்பிரித்துப் பெருந்தகைமையோடும் தானாம் வண்ணம் செய்து ஆதரித்தான். அதுபோல ஆன்மா மல இருளைச் சார்ந்திருந்த அறியாமையாலே ஐம்பொறிகளாகிய வேடரின் சுழற்சியிற்பட்டு விடய போகங்களிலே அழுந்தி தன்னையும் (பக்குவ காலத்துப் பேரின்ப அறிவுதரவந்த) தலைவனையும் அறியாதிருந்தது. அவ்வேளையில் இறைவன் தனது அருளே திருமேனியாகக் குருவடிவம் கொண்டு எழுந்தருளிவந்து உபதேசித்து ஐம்பொறிகளினின்றும் நீக்கி மலங்களின் வலியைக் கெடுத்துத் தன்வண்ணமாக்கி மலர்போலும் திருவடிக்கீழ் வைத்து வாழ்விப்பான்.

இருவினையால் மதிமயங்கி இடர்ப்பட்டுக் கிடப்பேனைக்
கருணையினால் ஆண்டுகொள்ளக் கடவுள் திருவுளங் கொண்டு
அருள்மேனி தாங்கி அவனியிலே வந்தானைத்
திருவாழும் நல்லை நகர்த் தேரடியிற் கண்டேனே

—நற்சிந்தனை—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பரும் அம்மையப்பரும்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் சிறந்த கொள்கையைக் கைப்பிடித்துத் தாய்தந்தையரைப் பேணிப் பாதுகாத்து வரும் மைந்தர்கள், பின்னர் தெய்வத்தை அன்னையும் பிதாவுமாகக் கொண்டாடி வழிபடுவர். இத்தகைய கோட்பாடு யாவரும் கருத்திற் கொள்ளத்தக்கது. ஏனெனில் எல்லோருக்குமே, திருக்களிற்றுப்படியார் கூறுவது போல,

"அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் ~ அம்மையப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பார் அவர்."

அம்மை வடிவில் உள்ள சக்தியுடன் கூடிய சிவத்தை வழிபடுவதேயன்றிச் சக்தியைத் தனித்து வழிபடும் முறையைச் சமய ஆசிரியர்கள் வகுத்துக் கொடுக்கவில்லை. "சிவ" என்பதிலும் "சி" என்னும் எழுத்து பதி அட்சரம் ஆகவும், "வ" என்னும் எழுத்து "பரை" அட்சரமாகவும் அமைந்துள்ள நுட்பம் காணலாம். இதுவே அம்மையப்பனது கோலமாகும்.

"ஒருபக்கம் புலித்தோலாடை, ஒருபக்கம் துகிலாடை; ஒருபக்கம் சங்கக் குழை, மறுபக்கம் சுருண்ட தோடு; ஒருபக்கம் பால்வெண்ணீறு, மறுபக்கம் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்; ஒருபக்கம் சூலாயுதம், மறுபக்கம் வளையல்." இது அர்த்தநாரி வடிவம். இவ்வாறு இறைவன் விளங்குவர் என மணிவாசகனார் குறிப்பிடுகிறார். அப்பர் பெருமான் இவ்வகையில் அளிக்கும் காட்சியை இனிக் காண்போம்.

வலப்பக்கம் சிவன் பாகம், வலக் காதில் சங்கு புரள்கிறது. இடப்பக்கம் அம்மை பாகம், இப்பாகத்தில் காதில் செந்நிறமான காதோலை பிரகாசிக்கிறது. வலப்பக்கத்தின் (சிவபாகத்தின்) வாய்ப்பாகம் வேதம் ஓதுகிறது; இதைக்கேட்கும் இடப்பக்கத்து (உமை பாகத்தின்) உதட்டின் பாகம் மகளிருக்கே உரித்தான முறையில் புன்முறுவல் செய்கிறது. சிரசில் வலப்பக்கம் சிவபெருமானுக்குரிய சடைப்பாகம் இருக்கிறது. இடப்பக்கத்தில் உமைக்குரிய கூந்தல் பாகம் அமைகிறது," இக்கருத்துக்களைக்கொண்ட அப்பர் பாடிய பாடல் சித்திரம்.

"புதுவிரி பொன்செ யோலை யொருகாதொர் காது
சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேத கீத மொருபாடு மோத
மொருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாகம் மாதர்
குழல்பாக மாக வருவர்
இதுஇவர் வண்ண வண்ணம் இவள்வண்ண வண்ணம்
எழில் வண்ண வண்ணம் இயல்பே"

உலகங்கள் எல்லாம் சர்வசங்கார காலத்தில் அழிந்துவிடும். பிரமதேவர், விஷ்ணு, உருத்திரர், மகேசுரர், சதாசிவர் என்னும் வரிசையில் ஒரு மூர்த்தத்தில் மற்றமூர்த்தம் ஒவ்வொன்றும் ஒடுங்கும். எல்லா மூர்த்தங்களும் இறுதியில் ஆதிசத்தியினிடத்து ஒடுங்கும். இந்நிலைகளை ஆதிசத்தியாகிய அம்மை ஒருவரே இறுதிநிலை வரையில் நேரில் காண்கிறார். ஆதலால் "சாக்ஷிணி" என்பது அவருக்குள்ள பெயர்களில் ஒன்று. கடைசியில் ஆதி சக்தியும் சுத்த சிவத்தில் அடங்கும். சுத்த சிவம் அதுசமயம் செயலற்று இருக்கும், காரணம் சத்தியும் ஒடுக்கம் பெறுவதால். (உலக வழக்கிலும் "சக்தியிருந்தால் செய். இல்லை என்றால் சிவனே என்றிரு" எனக் கூறுவதிலிருந்தும் இவ்வுண்மையை உணர்ந்து கொள்ளலாம்.) பகலெல்லாம் உழைத்துக் களைத்துவிட்ட உழைப்பாளி, அடுத்தநாள் உழைப்பிற்குத் தன்னைத் தகுதியாக்கிக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கு இரவில்உறங்கி, மறுநாள் எழுந்திருப்பது போன்று, பிறவியாத்திரைகள் பலவற்றை மேற்கொண்ட உயிர்களும் (பல பிறவிகள் எடுத்த உயிர்கள்) இளைப்பாறுமாறு, இறைவன் அவற்றைச் சிலகாலம் விட்டுவைக்கிறார். இளைப்பாறிய உயிர்கள் மேலும் முன்னேற வேண்டும் என்னும் நோக்கில், இறைவன் அவற்றிற்கு உடலுறுப்புகளை அளித்து இவ்வுலகில் தோற்றுவிக்கிறார். இவ்வாறு தோற்றுவிக்க அவர் அருளைத் திருமேனியாகக் கொள்கிறார். இதுவே "சிற்சக்தி" யாகும். "சித்" என்பது அறிவு, "சத்திதான் தடையிலா ஞானம்" என சிவஞான சித்தியார் கூறுவதும் இதுவாகும். பின், சதாசிவமூர்த்தி முதலிய மூர்த்தங்கள் ஒருவர் பின் ஒருவராகத் தோன்றுவர். இது முதற்கொண்டு பிரளய காலமாகிய ஊழிக்காலம் வரையில் தாமும் தம் தையலுமாகிய சக்தியுடன், சிவபெருமான் நிற்கும் காலம் வரையில் தாம் வகிக்கும் கோலம் தொன்மைக் கோலமாகும். எல்லா உயிர்களும் தத்தம் வினைப்பயனை அனுபவித்துத் தக்கமுறையில் இறைவழிபாடு புரிந்து, அவ்வினையும் "பையநையும்" வகையில் வாழ்க்கையை மேற்கொள்ள உதவும் பொருட்டே, இத்தொன்மைக் கோலத்தைப் பெருமான் மேற்கொள்கிறார். இவ்வாறு அவர் கோலங் கொள்வதால் அண்டத்திலும் (சரம் அசரம் எனப்படும்) சராசரங்களிலெல்லாம், ஆண்பெண் எனும் இருவகை இனங்கள் தோன்றுகின்றன. சரம் என்பதில் மனிதர், விலங்குகள் எனும் இனங்கள் அடங்கும். அசரம் என்பதில் மரம் செடிகள் அடங்கும். மர இனத்தில் சேர்ந்த பனையிலும் ஆண்பனை, பெண்பனை எனும் இரு பாலினங்கள் உள்ளன என்பதை அறிவோம். எல்லா உயிர்களும் "சக்தியும் சிவமுமாகிய சரிதையில் பயில்கின்றன" எனச் சேக்கிழார் காட்டும் உண்மைக்கு விளக்கம் காண்பார் போல், "சக்தியும் சிவமுமென தன்னுள்ளே இரு வேறுவகைப்பட்ட தன்மைகள் வைத்தலான் - பல வேறுவகைப்பட்ட உயிர் வடிவங்கள் அனைத்தும் குறியானும் குணத்தானும் அவ்விரு யோனிக்குள் இரு வேறுவகையாயடங்கித் தம்முட் கூடிக்களித்து வாழ நிற்கும் இயல்பு" என எடுத்துக் காட்டுகிறார் மாதவச் சிவஞான முனிவர்.

இப்பேருண்மையை அப்பர் பெருமான் தாம் பாடியருளிய திருவையாற்றுப் பதிகத்தில் நமக்கு எடுத்துக் காட்டுகிறார். " திருக்கைலைக் காட்சி கண்டாலன்றி, அழியும் உடம்புடன் மீளேன்" என்பதான திடமான மனஉறுதியுடன் வடதிசை நோக்கிக் கங்கையைக் கடந்து பன்னெடுந்தூரம் நடந்து சென்ற அடிகள், தம்முடைய உடல் உறுப்புத் தேய்வதைக் கண்டும் மனம் தளரவில்லை. அதுசமயம் "திருவையாற்றில் கைலைக் காட்சியைக் காண்" என்பதாக இறைவன் வாக்கைக் கேட்டார் அடிகள். அங்குள்ள ஒரு திருக்குளத்தில் மூழ்கினார். "யாதும் சுவடு படாமல்" தென்திசையிலுள்ள திருவையாற்றுக் குளத்தில் வந்தெழுந்தார். சிவபெருமான், பார்வதி தேவியாருடன் திருக்கைலையில் இருந்த காட்சியைக் கண்டார். அக்காட்சிக்கு முன்னோடியாக, யானை, சேவல், குயில், மயில், அன்றில், ஏனம் (பன்றி), கருங்குரங்கு, நாரை, கிளி, காளை ஆகியவை தம்தம் துணைகளுடன் "சக்தி சிவமாம் தன்மையில்" இருப்பதைக் கண்டார். அவர் பாடிய திருப்பதிகம் இதைத் தெரிவிக்கிறது. இப்பதிகத்தின் முதல் பாடல் சிறுவர் முதல் பெரியோர் வரையில் ஓதுவதொன்றாகும்.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுப டாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்,

இதை,

"பொன் மலைகொடி யுடனமர் வெள்ளியம் பொருப்பில்
தன்மை யாம்படி சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதை
பன்மை யோனிக ளியாவையும் பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயில் முன் வந்தார்"

எனச் சேக்கிழார் நமக்குத் தெரிவிக்கின்றார்.

இதுவே அன்பின் சிகரம். இத்தகைய தெய்வப் பண்பாடு மணிவாசகனார் அருளிய திருக்கோவையாரில் விளக்கம் பெறுகிறது.

இணைபிரியாத நிலையில் சென்று கொண்டிருந்த ஒரு காதலனையும் காதலியையும் கண்டபோது, என்றுமே சாதாரணமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியினிடமிருந்து பிரிந்திராத தில்லைச்-சிற்றம்பலவனாக, அவர்கள் இருவரையும் கருதி அவர்களைக் கைகூப்பி மற்றொருவர் வணங்கியதாக நாம் அறிகிறோம். மனிதரை மனிதராகக் காண்பதிலும், அவரிடமுள்ள தெய்வநிலையைக் காண்பது சிறந்ததன்றோ? காதலனுடன் சென்றுவிட்டாள் ஒரு மகள். அவ்விருவர்களையும் தேடிச்சென்ற செவிலித்தாய் வழியில் ஒரு ஆடவர் தம் காதலியுடன் வருவதைக் கண்டாள். "அன்பர்-களே உங்களைப் போன்ற இருவர்கள் வழியே சென்றதைப் பார்த்திர்களா? என அவர்களை நோக்கித் தாய் வினவினாள், அப்போது அந்த ஆடவர் கூறுகிறார்: "தாயே நீங்கள் கூறிய தன்மையையுடையவர்களை ஒரு குன்றின் சமீபத்தில் கண்டோம். அவர்கள் எவ்வாறு சென்றார்கள் என்றால், அக்காதலனது கழலும் அப்பெண்மணியின் சிலம்பும் ஒருபுறம் இருந்தன —அவரது வெண்பட்டும் அப்பெண்மணியின் செம்பட்டும் மின்னின. இருவர் வடிவங்களும் ஒரு வடிவமென ஒத்திருந்தன. அவ்வடிவம் எவ்வாறு இருந்தது என்றால், எல்லாவற்றையும் உடைய தம் காதலியுடன் ஒரு வடிவாய் விளையாடும் தில்லைச்சிற்றம்பலவன் என நாங்கள் கருதி, இது ஒரு நன்மையான செயல் எனக் கொண்டு அச்சிறந்த காட்சியைக் கண்டு கைதொழுதோம்." எனக் கூறினார். இப்-பாடல்கள் எத்தகைய அருமையான கருத்தைக் கொண்டுள்ளது!

"மின்றொத் திடுகழல் நூபுரம் வெள்ளைச் செம்பட்டு மின்ன
ஒன்றொத்திட வுடையாளொ டொன்றாம்புலி யூரனென்றே
நன்றொத் தெழிலைத் தொழவுற்றன மென்னதோர் நன்மைதான்
குன்றத்திடைக் கண்டனமன்ன நீ சொன்ன கொள்கையரே"
(திருக்கோவையார்)

அப்பர் வகுத்த முறையும், மாணிக்க-வாசகனார் காட்டிய உதாரணமும் அன்பைப் பெருக்கிடும்; ஒழுக்கத்தை நிலைநாட்டும்; உலகினையே சீர்திருத்தும் எனவும் கொள்ள-லாம்.

இவ்வாறு தத்துவமுறையில் இறைவனை அம்மையப்பனாக கண்டதன்றிக், குழந்தைகள் தம் தாய்தந்தையருடன் கொஞ்சி விளை-யாடுவது போன்று அப்பர் அடிகளும் அம்மை-யப்பனைத் துதிக்கிறார். திருமலையில் இறைவழிபாடு செய்த பின்னர் திருவொற்றியூர் வந்தடைகிறார். அங்கு வீற்றிருக்கும் இறைவனுக்கு "தியாகேசர், என்பதும் ஒரு பெயர் ஆகும். அவர் புரிந்த தியாகத்தைப் பற்றி எண்ணுகிறார். "இமயம் என்னும் மலைக்கு அரசனாகிய பர்வதராஜன் குலமகளாகிய பார்வதிதேவிக்குச் சிவபெருமான் தமது உடலின் இடப்பக்கத்தையே கொடுத்த-துமன்றி, நெற்றிக் கண்ணில் பாதியையும் கொடுத்து விட்டார். எனவே, இனி ஒன்றரைக் கண்ணன்" எனும் கருத்தில்,

"இன்றரைக் கண்ணுடை யாரெங்கு மில்லை யிமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட்பாவைக்குக் கூறிட்டநாள்
அன்று அரைக் கண்ணுங்கொடுத்து உமையாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன்கண்டீர் ஒற்றியூருறை யுத்தமனே"

எனப் பாடுகிறார். அவரது வடிவத்தைப் பற்றி நிந்தைத்துதி புரிந்தவர், அவரது வீரத்தைப் பற்றியும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். திரிபுர தகனம் செய்தது சிவபெருமானுடைய எட்டு வீரச்செயல்களுள் ஒன்று. திரிபுரத்தை அழிக்கச் சென்றபோது அவர் மேருமலையை வில்லாக வளைத்து தமது இடப்பக்கம் தாங்கிச் சென்றார். தமது வலப்பக்கத்துக்கை விரல்கொண்டு நாணேற்றுவது அவரது கடமை; இது சுலபமானது, மாபெரும் பாரமுள்ள வில்லைத் தாங்கிச் சென்றது எங்கள் அம்மையின் பாகமன்றோ? இவ்வாறு இருக்கச் சிவபெருமானே! நீவிரே திரிபுரம் எரித்ததாக எவ்வாறு சொல்ல இயலும்" என்பதான கேள்வியை அச்சிவபெருமானிடமே அப்பர் கேட்கிறார். அப்பாடலை இன்றும் பயின்று பயனடையலாம்.

"கற்றார்பயில் கடனாகைக்கா ரோணத்தெங்கள் கண்ணுதலே
விற்றாங் கியகரம் வேனெடுங்கண்ணி வியன்கரமே
நற்றா ணெடுஞ்சிலை நாணவலித்த கரநின்கரமே
செற்றார்புரஞ்செற்ற சேவகமென்னை கொல்செப்புமினே"


இனி, இறைவன் அப்பர் அடிகளை எவ்வாறு கண்டார் எனச் சிந்திப்போம். அப்பர் அடிகளுக்கு அவர்கள் தம் பெற்றோர் இட்ட பெயர் மருணீக்கியார். அவரது செந்தமிழ் வளம் காரணமாக இறைவனே திருநாவுக்கரசு



அவனே (சிவபெருமானே) தன்னைப் பலகோலங்களாக்கி விளையாடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோனத்தேன் குடித்த கனேடியத் தேன்வண்டு



[illegible] காலத்தில் அவரிடமிருந்து பருகிய ஞான பானத்தை [illegible] ... [illegible] ... [illegible] ... [illegible] ... "Asking for Earth: Spiritual and Environmental Crisis" [illegible] குறிப்பிடத்தக்கது.

ஈழத்துசிறர் அவரை யாழ்ப்பாணத்துச் சுவாமி என அழைத்தனர். பௌத்த சிங்களவர்கள், கிறிஸ்தவர்கள் உட்பட அவரது ஆயிரக்கணக்கான அடியவர்கள் அவரை ஒரு ஞானியெனக் கருதினர்.

அண்டி வந்தவரை அச்சுறுத்தும் தன்மையராகவும், தம்முன்னிலையில் பணிந்து இருந்து நிற்பவரைக் கோல் கொண்டு வெருட்டும் தன்மையராகவும், இவ்வாறு இன்ன தன்மையர் என்று எடுத்துச் சொல்லொண்ணாதவராக இருந்தபடியினால் அவரை அவரது அணுக்கத் தொண்டர்கள், "யாழ்ப்பாணச் சிங்கம்" எனவும் "போதிசத்துவரின் மறுபிறப்பு" என்றும் அழைத்தனர். நான் அவரைச் சுவாமி என்றே அழைத்தேன். தூய வேதாந்த அடிப்படையிலான இந்து சமயத்திற்கு ஓர்

---

என்னும் பெயரை வழங்கியது மட்டுமன்றி "இத்திருப் பெயர் ஏழுலகும் பரவுக" எனக் கட்டளையிட்டார். ஆதலினால் இப்பெயர் ஒரு "பெருநாமம்". இப்பெயரை எழுதிவைத்தும் கூறிக்கொண்டும் வந்ததால் முத்தி பெற்றார் அப்பூதி அடிகள் என்பதை "திருநாவுக்கரசு வள்ளலென்ற பெயர் எழுதியும் கூறியும் என்றும் துதித்து மனம் பெற்றார் ஒரு நம்பிஅப்பூதி" என்பதால் அறிந்து கொள்ளலாம். நாவுக்கரசு என்னும் பெயரிலும், "ஞானசம்பந்தர்", "நம்பியாரூரர்" என்னும் பெயர்களைப் போன்று ஒற்றெழுத்துக்களை நீக்கியிடின் திருவைந்தெழுத்துப் போன்று ஐந்தெழுத்து இருப்பதைப் பேரறிஞர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். நாவுக்கரசு என்னும் பெயருடன் அவருக்குத் திருஞானசம்பந்தர் சூடிய "அப்பர்" என்னும் பெயரும் நிலைபெற்றுள்ளது. சிவபெருமானது உரையே ஞானசம்பந்தர் உரை என்ற முறையிலும் திருஞானசம்பந்தர் சமயாசாரியர்களுள் முதல்வர் என்ற முறையிலும் அப்பர் என அவர் இட்ட பெயருக்குத் தனிமதிப்புள்ளது. இறைவனை அம்மையப்பனாக வழிபட்ட திருநாவுக்கரசு நாயனாருக்கு "அப்பர்" என்னும் பெயர் அமைந்ததிலும் பொருத்தமுள்ளது.

"[illegible]
[illegible] தாண்டகக் [illegible]
மதுர மாத்திரக் கண்டகச் செந்தமிழ் வளர்த்த
சதுர வாகீசக் குரவன்றன் சரணமே சரணம்"

-சிவப்பிரகாசர்-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறி[illegible]ாகவே அவர் எனக்குத் தோன்றினார். அறுபதுகளில் இலங்கையில் நான் கனடாவின் தூதுவராகப் பணியாற்றிய நான்காண்டுகளும் அவர் என் ஆசானாகவே இருந்தார். இதற்கு முந்திய பத்து ஆண்டுகளும் "குறுட்ஜீவ்" அவர்களின் உபதேசங்களில் நான் பயிற்றப்பட்டேன்.

இலங்கை வந்து சிறிது காலத்தில், பி.டி.ஒஸ்பென்ஸ்கி என்பவருடைய பழைய மாணவரான ஜேம்ஸ் ராம்ஸ்போதம், அவருடைய சகோதரர் பீற்றர் என்பவர்களின் மூலம் யோகசுவாமியைச் சந்திப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. நான் இலங்கையின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் அவர் உறைந்த ஒரு சிறிய கொட்டிலை ஒரு மாலை வேளையில் அடைந்தேன். அங்கு நான் கதவை மெதுவாகத் தட்டினேன்.

"கனடியத் தூதுவரா?"

என்றோர் பலத்த குரல் உள்ளிருந்து கிளம்பியது. நான் கதவைத் திறந்தேன். அங்கு நிமிர்ந்து ஒரு கட்டளையிடும் தோற்றத்துடன் பத்மாசனமிட்டு, வெண்ணரையும், வெண்தாடியுமாய், வெள்ளை வேட்டியுடுத்து அவர் இருப்பதைக் கண்ணுற்றேன்.

"நல்லது சுவாமி, அது நான் செய்து கொண்டிருப்பது, நான் அதுவல்ல" எனக் கூறினேன். பலத்த சிரிப்புடன் "அப்படியானால் வா, என்னோடு இரு" என அழைத்தார். அக்கணத்திலிருந்து நான் அவருடன் பிணைக்கப்பட்டதாக உணர்ந்தேன். "நான் யார்" எனக் கண்டறியும் என் முயற்சியில் மிக ஆழமாகச் செல்வதற்கும், அதைச் சிறிதளவேனும் உணர்வதற்கும் அவர் எனக்கு உதவினார்.

உண்மையில் இவரது சமகாலத்தவரான தென்னிந்திய அருணாச்சலத்தின் ரமண மகரிஷிகளைப் போன்று யோக சுவாமிகளும் "நான் யார்" என்பதை மந்திரமாகவும் உளதாந்தன்மையை வலியுறுத்துகின்ற வினாவாகவும் பயன்படுத்தினார். தியானத்தில் இருப்பதைப் புறக்கணித்து ஒன்றன்பின் ஒன்றாக அலுவலகக் கடமைகளில் நாடு பூராவும் ஓடித்திரிவதற்காக அவர் என்னை அடிக்கடி கண்டித்தார்.

நான் கனடாவில் உள்ள என் இல்லத்திற்குச் சென்று திரும்புகையில் பிரான்ஸ், கனடா, ஜப்பான், இந்தோனேசியா, கம்போடியா ஆகிய நாடுகளெல்லாம் சென்று, உலகைச் சுற்றி, வந்தபோது அவர் என்னைத் தம்மருகில் பலமாகக் கீழே இருத்தி உள்ளே காண்டற்குரியதை வெளியே தேடி உன் ஆத்ம சக்தியை வீணே செலவழிக்கின்றீர் எனக் குறிப்பிட்டார்.

"நீர் சும்மா இருப்பதை விடுத்து, ஏதேனும் செய்து கொண்டு எப்பொழுதும் ஓடிக்கொண்டு திரிகிறீர், ஏன் நீர் வீட்டிலிருந்து என்னையன்றி உன்னையே நீ நோக்கி நான் யார்?, நான் யார்?, நான் யார்?, நான் யார்?, நான் யார்?, நான் யார்?, என்று கேட்கக் கூடாது?" இவ்வாறு அவர் நான் யார்? என்னும் வினாவை உச்சரிக்கும் ஒவ்வொரு தடவையும் அவரது தொனியும், அதன் அழுத்தமும் அதன் செறிவும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. என்னைப் பயங்கொள்ளச் செய்யும் வரை அவர் இவ்வினாவைக் கேட்டார். பின் உடனடியாக அவர் அமைதியாயினார். மிகவும் சக்தி வாய்ந்த அமைதி. அவ்வறையே சொற்களுக்கு அப்பாற்பட்டு நிற்கும் அவரது பேச்சற்ற உபதேசத்தால் நிரம்பிற்று. அவருடைய இருப்பே என் அசையும் எண்ணங்களை அகற்றியது. அக்கணத்திலிருந்து எந்தவொரு வினாவுமின்றி "நான்" என்பதையுணர்ந்தேன், அது போதுமானது யார் என்கின்ற வினா அவசியமற்றதாயிற்று. இது நான் மீண்டும் கற்பதற்கும், மீண்டும் அனுபவிப்பதற்குமுரிய பாடமாக இருக்கின்றது. நான் மறந்த போது இவ்வாறு நினைப்பதும் செய்வதும் என்னை அவ்விடத்திற்கு எடுத்துச் செல்கிறது.

மற்றுமொரு தடவை என்னுடைய துணைவியாரும் நானும் எம் மூன்று பிள்ளைகளையும் யோகசுவாமியிடம் அழைத்துச் சென்றோம். பிள்ளைகளைப் பார்த்து சுவாமி "உங்களுடைய வயது என்ன?" என்று கேட்டார். எனது மகள் ஒன்பது வயது என்றும் புதல்வர்கள் பதினொன்று, பதின்மூன்று என்றும் கூறினர். ஒவ்வொருவருக்கும் பதிலுக்கு சுவாமி நான் உங்களுடைய ஒத்த வயதுடையவன் என்றார். எமது பிள்ளைகளோ நீங்கள் மூன்று வெவ்வேறு வயதில் ஒரே நேரத்தில் இருக்க முடியாது, நீங்கள் எங்கள் பாட்டனாரின் வயதிலும் முதியவர் என்று மறுத்துரைத்தனர். யோகசுவாமிகள் சிரித்து நாங்கள் விளங்கிவிட்டோமோ என்று பார்ப்பதற்கு எங்களைப் பார்த்து கண்ணசைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அதை நாங்கள் அவரது வேடிக்கை என்றே கருதினோம். பின்னர், அது நாங்கள் நுணுகியாய்ந்து கண்டுபிடிக்க வேண்டிய மிகவும் ஆழ்ந்த பொருளுடையதொன்று என்று மெதுவாக எங்களுக்குத் தெரியவந்தது

உடல் அதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை பல்வேறு வயது நிலையில் இருப்பினும் உடலைப் போன்று வேறோர் வஸ்து இருக்கிறது. அது எதிர்காலத்திலும் இருக்கும். அதற்கு இத் தூல சரீரம் ஒரு வாகனம் போன்றதே என்கின்ற இவ்வுண்மையை மறைமுகமாகக் கூறும் அவரது வழியே இது என நான் தற்போது நினைக்கின்றேன். இந்தவகையில் நாம் எல்லோரும் அந்த ஒரே வயதுடைய வஸ்துவே.

நான் பல தடவைகள் யோகசுவாமியைச் சந்தித்த பிற்பாடு, அவரிடம் கேட்பதற்கான என் வினாக்களைக் கவனமாகத் தயார்படுத்தக் கற்றுக்கொண்டேன். ஒரு நாள் அவ்வாறு செய்துகொண்டு, உள்ளே சென்று நிலத்தில் விரிக்கப்பட்டிருந்த பாய்விரிப்பில் இருந்தேன். அவர் என்னை நன்றாக உற்று நோக்கிக் கொண்டிருந்தார். நான் ஆரம்பித்தேன்

"*சுவாமி, நான் நினைக்கிறேன்.........*"

"*ஏற்கனவே பிழை*" (Already wrong!)
அவர் இடித்துரைத்தார். என் மனமோ மீண்டும் எண்ணமற்ற ஏகாந்த நிலைக்குச் சென்றது. இவ்வாறு, வணங்கி நிற்கையில் ஆத்மாவினுடைய பாதையைச் சரி செய்கின்ற ஒரு சற்குருவாகவே அவர் தோன்றினார்.

இந்நிலை எண்ணங்களுக்கும், சொற்களுக்கும் அப்பாற்பட்டதாயினும் அமைதியாயிருந்து விளங்கிக் கொள்வதற்கான சில மகாவாக்கியங்களினூடாக அவர் அதனை உபதேசித்தார். அவ்வாறான மூன்று வாக்கியங்களை நான் இங்கு குறிப்பிடுகிறேன். "சும்மா இரு", "ஒரு பொல்லாப்பும் இல்லை", "ஆதியிலிருந்து அனைத்தும் சரியாகவே உள்ளது". இந்த மகா வாக்கியங்களை அவர் ஒவ்வொருவருக்கும் இந்த அண்டத்திற்கும் பிரயோகித்தார். ஒழுங்கின்மையின் ஆழத்தினுள்ளும் ஓர் ஒழுங்கு இருப்பதே உண்மை.

நாங்கள் ஏதொன்றையும் விருத்தி செய்யவோ அல்லது உருவாக்கவோ தேவையில்லை. ஏனெனில் நாங்கள் இங்கேயே, இப்போதேயே எங்கள் ஆத்மாவில் ஒரு பூரணமான ஒழுங்கினுள்ளேயே இருக்கின்றோம். சுவாமிகளது சமாதியின் முப்பது வருடங்களின் பின் இவ்வுலகைப் பார்க்கும் போது, சுவாமிகளின் இம்மகாவாக்கிங்களின் உட்பொருளினை அறிவது ஒரு பெரும் சவாலாகவே அமையும் என எதிர்பார்க்கின்றேன். உண்மை ஒருபோதும் நேர்த்தியற்றதொன்றாகவோ அல்லது பிழையாகவோ இருக்கமுடியாது. ஆனால் எங்களுடைய அறியாமையிலேயே நேர்த்தியின்மையும், பிழையும் இருக்கமுடியும்.

## சிவத்தியானம்

*ஓ மனிதனே! நீ உண்மைப்பொருள். கேடற்றவன். உனக்கு ஒருவருங் கேடு விளைவிக்க முடியாது. நீ இங்கும் அங்கும் எங்கும் உள்ளவன். நித்தியன். உறுதியுடனே சிங்கங் கானகத்தில் திரிவது போல் உலகமாகிய கானகத்தில் திரி. எந்த விதத்திலுந் தளர்வடையாதே. ஒரு நூதனமுமிங்கில்லை. முழுதுமுண்மை. ஒரு பொல்லாப்புமில்லை. ஓ மனிதனே! வானம் வந்தாலும் பூமி வந்தாலும் ஆட்சிசெய்யக் கருதாதே. சாட்சியாயிரு. மாட்சி உன் பிறப்புரிமை. அது என்னவுபாயத்தாலு மடையப்படுவதொன்றன்று. அப்படியுள்ள காரியம். மற்றனைத்துஞ் செப்படிவித்தை. அறிவு, அறியாமை உன்னிடமில்லை. நீ பரமாத்மா.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

*(நித்தியானந்தத்தை வேண்டித் தம்மிடம் சரண்புகுந்த ஒரு சீடனுக்கு உபதேசிக்கும் பெரியார், இறைவன் எல்லாவுயிர்களிடத்தும் இன்பவுருக் கொண்டு வீற்றிருக்கின்றான் என்றும், வேதாகமங்களும், தேவார திருவாசகங்களும் அதற்குச் சான்றென்றும் இன்பம் இதயத்தின் கண்ணே இடையறாது வருவதற்குத் தடையாயுள்ளது அறியாமையே என்றும் விடய இன்பநுகர்ச்சிக் காலத்துப் புதிதாய் உண்டாவது போல உண்டாகிய இன்பமும் பூரணவின்பத்தின் பிரதிவிம்பமே ஆகும் என விசாரணையாற் காணலாம் என்றும் கூறியருளினார் என்பது முன்னுரைச்சாரம்.)*

தம்பி கேளும். இன்பம் எங்குள்ளது? எப்படி நிகழ்கிறது? அதை அடைவது எப்படி? என்று இறவா இன்பத்தை அடைய விரும்பும் ஒவ்வொரு மனிதனும் விசாரித்தல் வேண்டும். விசாரணையினாலே உண்மை இன்பத்தைப் பெறலாம்.

இன்பநிகழ்ச்சிக்கு இடமாயுள்ள மனம் இன்ப நிகழ்ச்சிக் காலத்தும் அதற்கு முன்னும் பின்னும் எந்நிலையில் இருக்கின்றதென முன்னர் விசாரித்தோம். இன்பநிகழ்ச்சிக்கு முன் இச்சித்த பொருளை நாடில் பகிர்முகப்பட்டுத் தேடியலைந்து சஞ்சலம் நிறைந்ததாயிருந்ததென்றும், இச்சித்தபொருள் கிடைத்ததும் மனம் அந்தர் முகப்பட்டுச் சகலசஞ்சலங்களினின்றும் நீங்கி நான் என்பதும் அற்ற ஓர் உபசாந்த நிலையை அடைகின்றதென்றும் அந்நிலையில் இன்பம் பிறக்கிறது என்றும் கண்டோம்.

இதற்கு ஒரு திருஷ்டாந்தம் கூறுவேன். கேள் நான் ஒருமுறை ஒரு காட்டின் கண்ணே பளிங்குபோன்ற நீரால் நிறைந்த ஒரு தடாகத்தைக் கண்ணுற்றேன். அத்தடாகத்திலுள்ள நீர் அலைகளற்றதால் அசையாதிருந்தது. அதற்கு மேலே களங்கமற்ற ஆகாயத்தின் கண்ணே சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். நீருட் பார்த்தேன் அங்கு இன்னொரு சூரியன் காணப்பட்டான். நீருட் காணப்பட்ட அந்தச் சூரியன் ஆகாயத்தின் கண்ணுள்ள சூரியனது பிரதி விம்பமே என்று தெளிந்துகொண்டேன். இந்தப் பிரதி விம்பத்தின் அழகை வியந்து சிறிது நேரம் நின்றேன் காற்றுச் சிறிது அசையத்தொடங்கியது. நீரின் மேற்பரப்பில் சிறு அலைகள் உண்டாயின. சூரியனது பிரதி விம்பம் முன்போல் அவ்வளவு தெளிவாய்த் தெரியவில்லை. காற்று உரமாய் அடிக்கத்தொடங்கியது. பெரும் அலைகள் எழுந்தன சூரியனது பிரதி விம்பத்தை காணாது மயங்கின. ஆனால் சூரியன் ஆகாயத்தில் முன்போலவே பிரகாசித்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்தின் பின் காற்று நின்றது, அமைதி ஏற்பட்டது, அலைகள் நீங்கின. நீரின் கண்ணே சூரியன் மறுபடியும் தோன்றினான்.

மனத்தை இந்த நறுநீர்ச்சுனைக்கு ஒப்பிடலாம். உயிருக்குயிராய் என்றும் நீங்காது, சாட்சி மாத்திரமாய் விளங்கும், சச்சிதானந்த சொருபமே சூரியன். அனுபவிக்கப்பட்ட இன்பமோ அதன் பிரதி விம்பம். அறியாமையால் மனத்தின் கண் உண்டாகும் ஆசையே அங்கு வீசிய காற்று. ஆசையினால் உண்டாகும் சஞ்சலங்களே அங்கு எழுந்த அலைகள். ஆசை நிவர்த்திக்காலத்து மனத்தின் கண் விளங்கும் சாந்தமே அங்கு ஏற்பட்ட அமைதி. இத்திருஷ்டாந்தத்தை நன்கு சிந்தித்துப் பார். தேடிய பொருள் கிடைத்ததும் பகிர்முகப்பட்டு அலைந்து திரிந்த மனம் நிராசை நிறைந்ததாய் அகமுகப்பட்டுத் திரையற்ற நீர் போலத் தெளிகின்றது. அதில் சச்சிதானந்த சொருபம் பிரதி பலிக்கின்றது. அப்பிரதி விம்பமே அனுபவிக்கப்பட்ட இன்பமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அனுபவத்திலிருந்து ஒரு பெரிய உண்மை பிரத்தியட்சமாகின்றது. அது என்னவெனில் சாதாரண விடய இன்ப அனுபவத்திலும் ஆசைப்பட்ட பொருள் கைகூடி அதனால் நிராசை ஏற்பட்ட சமயத்திலேயே இன்பம் உதயமாகிறது. ஆதலால் சதா இன்பத்தை அனுபவிக்க விரும்பினால் சதா ஆசையிநின்றும் நீங்கியிருத்தல் வேண்டும் என்பதே. இது பற்றியே "ஆசைஅறுமின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசைஅறுமின்" என்றும் "நிராசை இன்றேல் தெய்வம் உண்டோ" என்றும் பெரியோர் அவா அறுத்தலை வற்புறுத்தினர்.

"இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும் துன்பத்துட் துன்பம் கெடின்" என்று திருத்தகு தெய்வத் திருவள்ளுவர் அருளிய திருவாக்கும் இக்கருத்தை ஐயந்திரிபற உணர்த்துகிறது. இவ்வருமைத் திருவாக்கை மனனஞ் செய்து அதன் கருத்தைச் சிந்தித்துப்பார்.

புறப்பொருள்கள் ஒருபோதும் இன்பத்தை உண்டாக்குவனவல்ல என்று ஐயந்திரிபற உணர்தல் வேண்டும். அற்பமுனக்கொன்று-இனிதாயின் அதனால் பிறப்பிலகப்பட்டாய் என்றும் "உச்சமுறு பதம்வேண்டில் அனைத்து-வாதனையினும் நின்று உள்ளம் தன்னை நிச்சயமாய் உணர்வாலே நீக்குவாய்" என்றும் ஸ்ரீ ராமருக்கு வசிட்ட முனிவர் உபதேசித்தார். பிறப்புகளுக்கெல்லாம் காரணம் புறப்-பொருள்களால் உண்டாகாத இன்பத்தை அவற்றால் உண்டாவதாகக் கருதும் அறியாமையால் எழும் அவாவே. அந்த அறியாமையைத் திடஞானத்தால் நீக்க-வேண்டும்.

சாதாரணமாய் மனிதர் மாடுண்டு, கன்றுண்டு, மக்களுண்டு, மனையாளுண்டு, 'கார்' உண்டு, பணமுண்டு, குணமுண்டு, என்றின்னோரன்ன எண்ணங்களால் மகிழ்ச்சி அடைகின்றனர். இந்தப் புறப்பொருள்கள் எனக்கு அது உண்டு, இது உண்டு என்று எண்ணும் எண்ணங்களுக்கும் அவற்றால் மனத்தின் கண் ஏற்படும் சாந்தத்திற்கும் கர்த்தாவேயன்றி அச்சாந்தத்தின் கண் நிகழும் இன்பத்திற்குமக் கர்த்தா அன்று. அமைதியான வாவிக்கண் விளங்கும் சூரியனது பிரதிவிம்பத்துக்குச் சூரியனே கர்த்தா அன்றி பிறிதொன்றன்று. அதுபோல் மனச்சாந்தத்தின் கண் விளங்கும் இன்பத்துக்கும் கர்த்தா சச்சிதானந்த சொரூபமாகிய ஆத்ம-சைதன்னியமே யன்றிப் பிறப்பொருளன்று.

பசையற்ற வெற்றெலும்பைக் கடிக்கும் நாயானது அவ்வெலும்பு குத்துவதனால் தன் தாடையிலிருந்து வரும் இரத்தத்தைச் சுவைத்து அவ் இரத்தம் எலும்பிலிருந்து உண்டாகிறதென நினைத்து மகிழ்வது போல் சாதாரண மனிதன் ஆத்ம சைதன்னியத்திலிருந்து தன்னிடத்து ஊறும் இன்பத்தைப் புறப்பொருள்களினின்றும் ஊறுவதாக நினைத்து விடுகின்றான்.

சமஷ்த்த இன்பங்களுக்கும் காரண-மாகிய பரப்பிரம்மம் உன்னில் சொரூபமாய் நீயாய் என்றும் விளங்குகிறது. இந்த பெரிய ஐஷ்வரியத்தை உன்னகத்தே உடைய நீ தரித்திரர்களைப் போல ஏன் பொருள் தேடி வெளியே உலைகிறாய். பேரின்பமாகிய அமிர்தத்தை இரவும் பகலும் புசித்துக் கொண்டி-ருப்பதை விடுத்து விடய சுகங்களாகிய பிச்சைச் சோற்றுக்கு ஒரு போதும் ஆசைப்படாதே.

## மனவொளி இதய ஒளியில் ஒன்றி மறையும் மருமம்

உலகனைத்தும் உடலிலும் உடலனைத்தும் இதயத்திலும் அடங்கியுள்ளதால் உலகனைத்தும் இதயத்துள் அடக்கம். சூரியன் சந்திரனுக்கு ஒளியளிப்பது போல இவ்விதயமே மனத்திற்கு ஒளியளிக்கிறது. சூரியன் துலங்கா இரவினில் சந்திரனிடம் ஒளி காண்பது போல இதயத்தே நிலைபெறாதவன் தன் மனதை மட்டுமே காண்கின்றான். ஒளியின் மூலமாம் தன் உண்மை வடிவைக் காணாது மனத்தாலே பொருளை வெவ்வேறாகக் கண்டு பாமரன் மயங்குகிறான். இதயத்தே நிலைத்த ஞானியோ பகலின் வெயிலிலே நிலவொளி ஒன்றி மறைவதைப் போல மனவொளி இதயவொளியில் ஒன்றி மறைவதைக் காண்கின்றான். காண்பான் வேறு காணப்படு பொருள் வேறு என்ற எண்ணம் மனத்திலேதான் உளது. இதயத்திலே வீற்றிருப்போருக்கு காண்பானும் காணப்படு பொருளும் ஒன்றாகி விடும்.

*–பகவான் ரமணர்–*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டேன் அவர் திருப்பாதம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த மாதர்ப்பிறைக்கண்ணியானை எனத் தொடங்கும் திருப்பதிகத்திலே, பாடல்தோறும் பயின்றுவரும் ஒரு மொழி 'கண்டேன் அவர்திருப்பாதம்' என்பது. இத்திருமொழி இடம்பெறும் திருப்பதிகம் முழுவதையும் ஓதி உணர்வதனால் அப்பரடிகள் திருப்பாதங்கண்ட வழிமுறையினையும், அவர் கண்ட திருப்பாதக்காட்சியியல்பையும் ஒருவாறு உய்த்துணர்தல் கூடும்.

இத்திருப்பதிகத்திலுள்ள பத்துப்பாடல்களும் ஒரே ஒழுங்குமுறையில் அமைந்திருக்கின்றன. அவ்வொழுங்குமுறையாவது:

1. பிறை சூடியபெருமான் உமையம்மையாரோடு எழுந்தருளியிருக்கும் அருட்கோலச் சிறப்பு.
2. ஐயாறடையும் அப்பரடிகளது அளவுபடாத தோரன்பு
3. காதற்பெருக்கிற் கலந்து பிணைந்து வரும் இணைகளின் காட்சி
4. திருப்பாதக்காட்சி

***1. பிறை சூடியபெருமான் உமையம்மையாரோடு எழுந்தருளியிருக்கும் அருட்கோலச் சிறப்பு.***

"மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி"
"பிறையிளங் கண்ணியினானை பெய்வளையாளொடும் பாடி"
"தண்மதிக் கண்ணியினானைத் தையல்நல்லாளொடும் பாடி"
"வளர்மதிக் கண்ணியினானை வார்குழலாளொடும் பாடி"

என்றவாறு பாடல்தோறும் பாடப்பெற்றிருக்கிறது. இவற்றுள் பிறைசூடிய பெருமானைப் பலபலவண்ணமாகப் பாடிப்பரவுவதன் பொருள் நொந்தவர் தம்மை நொடியினில் காத்தருளும் பெருமானது கருணைப்பெருக்கைப் போற்றுதலேயாம். சந்திரன் போகமயக்கத்தாலே பெருந்தீங்கு செய்தான். அதனால் கலைகலையாகக் குறைந்து தேய்ந்து அழிந்தொழியும் நிலையை அடைந்தான். இந்நிலையிலே பெருமானைச் சரணடைந்து குறையிரந்து வேண்டினான். பெருமான் அவ்வேண்டுதலுக்கிரங்கித் தன் சடையிலே ஏற்றி வாழ்வளித்தார். சந்திரன் பெருமானது சடையில் இலங்குவது தயாமூலதன்மத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலன் அளிக்கும் பெருமானது கருணையின் விளக்கமேயாம். ஆரேயெனினும் "சடையாய் சரணம்" எனவேண்டினால் அவர்க்கெல்லாம் பெருமான் சரணளிப்பார் என்பதன் சாட்சியாகச் சந்திரன் பெருமானது சடாமுடியில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான்.

உமையம்மையாரொடும் உடனாயிருக்கும் வடிவினைப்பலவாறு பாடிப்பரவுதலானது நெருப்பிற் சூடுபோன்றுள்ள இறைவனின் அருட்குணத்தை நினைவுகூருதலேயாம். உமையம்மையார் இறைவனது பேரருளின் வடிவமேயாம். உயிர்களை உடம்போடு கூட்டிப்பிறப்பித்தல், போகங்களை அளித்தல் ஆதிய யாவும் பெருமானின் அருளேயெனினும், மொய்த்திருண்டு பந்தித்து நின்ற பழவினை தீர்த்துத் திருப்பாதம் காட்டித் தானாக்கித் தன்மலரடிக்கீழ் வைப்பதே அவரின் பேரருளாகும்.

ஆகவே, பிறைசூடிய வண்ணத்தையும், உமையம்மையாரொடு உடனாயிருக்கும் வடிவையும் வாயாரப்பாடுவதன் நோக்கம் சார்ந்தார்க்குச் சரணளித்துத் திருப்பாதங்காட்ட முன்னி நிற்கும் பெருங்கருணைத் திறத்தை விளக்குதலேயாம்.

***2. ஐயாறடையும் அப்பரடிகளது அளவுபடாததோர் அன்பு***

இது

"முரித்த விலயங்களிட்டு முகமலர்ந் தாடாவருவேன்"
"உண்மெலி சிந்தையனாகி உணரா உருகா வருவேன்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரும்புலர் காலையெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்"
"எங்கருள் நல்குங்கொல் எந்தை எனக்கினி என்னா வருவேன்"

என்றவாறு பாடல்தோறும் பாடப்பட்டிருக்கின்றது. பெருமான் தன்னையடைந்தார்க்குத் திருப்பாதங்காட்ட முன்னிநிற்றலில் பித்தராகவே உள்ளார். அன்பர்க்கு வேண்டுவது அத்திருப்பாதத்தைக் காணும் கண்ணைத் திறக்கவல்ல பத்திப்பித்தேயாகும். மேற்காட்டிய தேவார மொழிகளில் அப்பத்திப்பித்துத் தெளிவாய்த் தெரிகிறது. "எங்கருள் நல்குங்கொல்?" என்பதில் அருட்தாகம் தெரிகிறது. "உணரா உருகா வருவேன்" என்பதில் உள்ளார்ந்த மெய்யன்பு விளங்குகிறது. பெரும்புலர்காலை எழுந்து பெறுமலர் கொய்து வருதலில் அவர்தம் பித்தர்க்குப்பத்தரான திறத்தைத் தெளிந்து கொள்ளலாம். முரித்தவிலயங்களிட்டு முகமலர்ந்தாடா வருவேன் என்பதில் பரவசத்தாரான பத்திப்பித்துத் தெரிகிறது.

### 3. காதற்பெருக்கிற் கலந்து பிணைந்து வரும் இணைகளின் காட்சி

இது
"காதன் மடப்பிடியோடுங் களிறுவருவன கண்டேன்"
"வரிக்குயில் பேடையோடாடி வைகிவருவன கண்டேன்"
"சிறையிளம் பேடையோடாடிச் சேவல் வருவன கண்டேன்"
"பேடைமயிலொடுங் கூடிப் பிணைந்துவருவன கண்டேன்"
"நற்றுணைப் பேடையோடாடி நாரை வருவன கண்டேன்"

என்ற மொழிகளில் எடுத்துரைக்கப்பெற்றிருக்கிறது. தன்னை நாடித் தாகமாய் வருவோர்க்கெல்லாம் தன் தாளிணைகாட்ட முந்திநிற்கும் ஐயாறப்பனின் அருள்வெள்ளம் ஐயாற்று வெள்ளருவி போலவே பெருகி வழிகின்றது. அவ்வருள் வெள்ளத்திலே களித்துக் கலந்ததோர் காதற்கசிவொடு குளித்துத் திளைக்கும் பக்திப்பெருக்கு அப்பரடிகளுக்குள்ளது. ஆதலால் ஐயாறன் அடித்தலத்தைக் காண்பதற்கு ஐயாற்றுக் கோயிலுட் செல்லவேண்டிய அவசியமுமில்லை. செல்லும் வழியிலேயே அற்புதமான திருப்பாதக் காட்சி வாய்த்து விடுகிறது. கயிலைக் காட்சியைக் காலடியில் காட்டவல்லவரல்லவா நம் கருணைக்கடல். அவர் தாம் சக்தியும் சிவமுமாயிக்கும் தன்மையை ஐயாற்றுச் சராசரங்களிலெல்லாம் அப்பரடிகளுக்குக் காட்டியருளிய வண்ணத்தைச் சேக்கிழாரடிகள் பரக்கப் பாடியிருக்கின்றார். அப்பரடிகள் காதலிற் கலந்துவரும் களிறு மடப்பிடி, இளமணநாகு தழுவிவரும்ஏறு ஆதியவற்றிலும் அம்மையப்பரின் அருட்கோலத்தையே கண்டுகளிப்பதைக் கூறியிருக்கிறார்.

"அன்பே கடவுள் அன்பே உலகம்
அன்பே உயிர்கள் அன்பே அனைத்தும்
அன்பே ஆவதும் அழிவதும் போலாம்
அன்பின் அதிசயம் ஆரறிவாரே"

என எங்கள் குருநாதன் பாடுவார். குழந்தையை வயிற்றில்சுமந்தும் முலையூட்டியும் தாய் வளர்க்கின்றாள். துயிலும் குளந்தையின் அருகே வரும் சீறும் பாம்பின் முன் அச்சமின்றிப் பாய்ந்து செல்லவைப்பதும் தாயன்பே. இத்தகைய அன்பினோலே எறிபத்தர் மதயானையின் முன் பாய்ந்து மழுவினால் எறிந்ததாக அறிகிறோம். ஈதெல்லாம் அன்பின் அதிசயம். இவ்வன்பில் ஒளிர்வது கடவுளின் எல்லையற்ற கருணையின் ஒரு சுடரே. இச்சுடர் அனைத்திலும் ஒளிர்கின்ற தெனினும் காதலிற் கலந்து இணைபிரியாது பிணைந்திருக்கும் 'இளசு'களின் அணைவில் உச்சவிளக்கம் பெறுகின்றது. ஆதலினாற்போலும் அப்பரடிகள் இளமைமீதூர இணைந்து நிற்கும் பறவைகளிலும் களிறு பிடிகளிலும் கடவுட் காட்சியைக் காண்கின்றார். ஓரிடத்து ஒளிரும் கதிரைக் கொண்டு உலகெங்கும் ஒளிகாலும் கதிரவனைக் காண்பதுபோல பிராணிகளின் அன்புறவு கொண்டு பெருமானின் பெருங்கருணைப் பெருக்கை அனுபவிக்கின்றார்.

### 4. திருப்பாதக்காட்சி

காதல்மடப்பிடி ஆதிய கோலங்கள், அன்பர்கள் கண்ணிணைகண்டு களிக்கும் வண்ணமாகக் கடவுள் கொண்ட கோலங்கள். அன்பிற் பிணைந்த கோலங்கள் மாத்திரமன்றி அனைத்துருவங்களும் கடவுள் கொண்ட


நாவடக்கம் இச்சையடக்கம் என்னும் மருந்தோடு சேர்த்துச் சாப்பிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலங்களே. ஆனால் அவரது அடிநிலையான திருவடியோ கண்முதற் புலனால் கண்டறிதற்கரியது. அது எண்ணுதற்கும் எட்டாத எழிலார் கழல். அதனை உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வு எனப் பெரியோர் கூறியிருக்கின்றனர். அவ்வுணர்வினை உரையுணர் விறந்து நின்று உணர்ந்தததனையே அப்பர் 'கண்டறியாதன கண்டேன்' எனக் கூறியருளினார். கட்புலனால் காண்டற்கரியததாதலால் கண்டறியாத திருப்பாதத்தைக் கண்ட பரமாதிசயக் காட்சியை அவர் அத்திருப்பதிகத்தில் சொல்லாது சொல்லி நயந்தனர் எனக் கூறுதலே அமையும்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைப் பதிகத்தின் உயிர்நிலை கண்டறியாத திருப்பாதத்தைக் கண்ட அதிசய அனுபவமே. அவ்வனுபவம் விளைதற்கு நிமித்த காரணமாக அமைந்தது காதற் சர (*இயங்கும்*) உயிர்களின் காட்சி. அப்பரடிகளின் பத்திப்பெருக்கு துணைக்காரணம். பிறைசூடிய உமைபாகரின் கருணைப் பெருக்கே முதற்காரணம். இக்காரணங்களைத் திருப்பாதக்காட்சியைத் தந்த 'தரவு' எனக்கூறினும் அமையும். தரவினைச் சுருக்கமாகக் கூறித் தரவு தந்த அனுபவத்தினை விரித்துரைப்பதே புலவர் வழக்கு. அப்பரடிகள் தரவினையே உற்சாகமாக வருணிக்கின்றார். தரவு தந்த அனுபவத்தை விரித்துரையாது அடக்கமாயுரைக்கின்றார். கண்டறியாத பரமாதிசய அனுபவத்திலே சொல்லுணர்வடங்கி நின்றனராதலால் கண்டவண்ணத்தை அப்படியே *சொல்லாது* சொல்லியதும் ஓர் அழகே.

அப்பரடிகளின் இத்திருப்பாதக்காட்சி ஐயாறடைகின்ற வழியில் பெற்ற புத்தனுபவமே. ஐயாறு சென்று ஐயாறலாத செம்பொற்சோதியைத் தரிசித்து அச்சோதிப்பொருளின் பொன்னடிக்கீழ் திளைத்துக்கிடந்த அனுபவமும் அவருக்கு வாய்த்தது. அவ்வனுபவத்திலே உரையால் உணரப்படாத அடித்தலம் உரைமாலையெல்லாம் உடையதாகவும் உள்ள அழகு அவருக்குப் புலனாயது போலும். அவற்றை நேரிசை, குறுந்தொகை, தாண்டகம், விருத்தம் என்னும் பலபல வண்ணங்களான சொன்மாலைகளாகத் தொடுத்தமைத்தார். அவற்றுள் திருவடித்திருவிருத்தம் பத்துப்பாடல் என்னும் அளவையும் தாண்டி இருபது பாடல்களாய்ப் பெருகிற்று. அது வாய்வேண்டும் வண்ணம் இசைப்பதற்கு இயைந்த விருத்தப்பாவால் இயன்றதும் பொருத்தமாயிற்று. இத்திருவிருத்தத்திலே கண்டறியாதன கண்டேன் என்று தொகையாய்ச் சொன்னதன் பொருள் விரியாய்ப் பொலிகிறது.

இத்திருவடித்திருவிருத்தம் 'சிந்திப்பரியன' என்றே தொடங்குகிறது. இடையே எழுவாய் இறுவாய் இலாதன. வானைக் கடந்து அண்டத்து அப்பால் மதிப்பன போன்ற வாசகங்களும் வருகின்றன. இவையெல்லாம் அப்பாலுக்கப்பாலான திருப்பாதத்தின் கண்டறியாத வண்ணத்தியல்புகளே. தானே தானாம் தத்துவமாய்த் தனித்திருக்கும் திருவடி தன் முதல் விதிர்விதிர்ப்பில் தோன்றும் சத்தியினால் வழிபடப்பட்டிருக்கும் நிலை மிக்க மகத்துவம் வாய்ந்தது. இந்த மகத்தான வழிபாடு திருவிருத்த முடிவினை நெருங்கும் போது ஓரிடத்தில் (*18ம் பாட்டு*) சொல்லப்பட்டிருக்கிறது. இப்பாடலில் உமையம்மையார் திருப்பாதத்தை அண்டி நின்று வழிபடும் அழகை அப்பரடிகள் மணியனைய சொற்களினால் சித்திரிக்கின்றார். அடிக்கீழ் அமர்ந்து அம்மையார் கரங்கூப்பித் தொழும் போதும் வருடும் போதும் செந்தாமரை மலரோடு கலந்திருக்கும் காந்தள் மலர்போல் தோன்றுவதைக் கண்டு பாடும் அத்திருவிருத்தம் மேல்வருவது.

சுணங்கு முகத்துத் துணைமுலைப்பாவை
 சுரும்பொடு வண்டு
அணங்கும் குழலி அணியார் வளைக்கரம்
 கூப்பிநின்று
வணங்கும் பொழுதும் வருடும் பொழுதும்
 வண் காந்தள் ஒண்போது
அணங்கும் அம்புயம் ஒப்பும்
 ஐயாறன் அடித்தலமே.

ஆதியான அம்மை அனாதியான பகவானாம் திருவடியை அணைந்து கலந்து ஆற்றும் வழிபாடே திருவடி வழிபாட்டின் உன்னதமான குறி. இத்தகைய வழிபாட்டுக்குரிய மூலமுதலே திருவடி.

தத்துவப் படிகளெல்லாம் கடந்து நின்று வழிபடுதற்குரிய தத்துவாதீதமான திருவடியின் எழுதலாகா அழகையெல்லாம் எழுதி மகிழ்ந்த அப்பரடிகள் அத்திருவிருத்தத்தை முரண்தொடையழகொளிர முற்றுவிக்கின்றார். அதாவது பலரும் பலநாளும் இகழ வீட்டுக்



மிகுமான ஊண், மிகுமான நித்திரை, மிகுமான தேகாப்பியாசம் என்னும் புத்திய பாகத்துடன் இரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான் அருள்மொழிகள்:

## நோக்கமொன்றற நிற்றற்கான நோக்கு

### *3. இன்ப துன்பம் இவையே மாயை*

இன்பநுகர்ச்சியே இவ்வுலகின் ஒரே-யொரு குறிக்கோள். எவ்வெக் கருமமாற்றினும் அவ்வக் கருமங்களினூடு நுகர எத்தனிப்பது இன்பத்தினையே. முழு மனித சமுதாயமும் இதற்கு விலக்கல்ல. இவ்வுலகில் நாம் பிறந்த நாட்டொட்டு இறக்கும் வரையும் இன்பத்தினை நுகர்வதிலேயே குறியாயுள்ளோம்.

இவ்வின்பத்தினை நுகரும் பொருட்டு கணக்கிலடங்காக் கருமமாற்றி இன்பத்தினை மாத்திரமன்றித் துன்பத்தினையும் ஒருங்குசேர அநுபவிக்கின்றோம். ஒரு விடயத்தில் ஆசை-வைத்து அதன்பொருட்டுப் பல இடையூறு-களையும் அநுபவித்து அவ்விடயத்தை-யடைந்தால் இன்புறுகிறுறோம்; அன்றேல் துன்புறுகிறோம். இவ்வாறு அடைந்தும் நாம் திருப்தியுறுகிறோமில்லை. மீண்டும் எம்மனம் வேறோர் இன்பத்தை நாடுகிறது. இவ்வாறே எம் வாழ்க்கைக் காலமும் கழிகிறது.

இன்பத்தைக் கண்டு களிகொள்வதும் துன்பத்தைக் கண்டு அஞ்சி நடுங்கி அமைதி-யிழந்து துவழ்வதும் எம்மியல்பாயிற்று. ஆனால் நாம் அறியவேண்டியதொன்று உண்டு. அதாவது இன்பதுன்பம் என்பது உலகின் இருமையியல்புகளில் ஒன்று. ஒன்றைத் தள்ளி ஒன்றைக் கொள்ளுதல் முடியாது. இன்பம் என்பதற்குத் துன்பம் என்னும் எதிர்ச்சொல் உள்ளது போல உலகிலும் இவையிரண்டும் சேர்ந்தே இருக்கும்.

> "சுகமும் துக்கமும், இரட்டைப் பிள்ளைகள்"

இவ்வாறு இன்பதுன்பங்கள் உலகவியற்-கையாயின் எவரால் இதனை மாற்றமுடியும். இவை யாவும் இறைவனின் செயலால் நிகழ்வது. உலகில் எந்நிலையிலுள்ளவராலும் இதனை மாற்றமுடியாது. மாறாக யாவரும் அநுபவித்தே தீரவேண்டும்.

> "இரவும் பகலும் மாறி மாறி முறையாக வரும். இவற்றில் ஒன்றையேனும் கொஞ்சம் தாமதித்து நிகழச் செய்யலாமா? இதுவே உலகம். இன்ப துன்பம் ஆகிய இரண்டும் இவ்வகையே"

---

கடை-வாயிலிலே பிச்சைக்கு ஓடேந்தி நிற்கும் திருவடி என முடிக்கின்றார்.

"பலிசேர் படுகடைப் பார்த்துப் பன்னாளும் பலரிகழ
வலியா நிலைநிற்கும் ஐயன் ஐயாறான் அடித்தலமே"

இதுவே திருவடியின் அருமையில் எளிய அழகு. அனைத்துக்கும் ஆதாரமான பாதாரவிந்தம் ஓர் ஆதரவுமற்ற பிச்சைத் தேவனாய் ஓடேந்தி நிற்பதிலேயே தன் அருள்விலாசத்தை விளக்கம் செய்து நிற்கிறது. அது தான் ஏந்தி நிற்கும் ஓட்டில் வாங்குவதற்கு நாடுவது அன்பரின் 'நான் எனது' என்னும் செருக்கையே. அவ்வாறு செருக்கை வாங்கும் சாலத்தினாலே அன்பரின் அகத்தைக் கொள்ளை கொள்கிறார். இவ்வாறு கொள்ளை கொள்ளும் திருவடி அதற்குப் பதிலாகத் தன்னையே அன்பர்க்குக் கொடுக்கிறது. இதுவே திருவடியின் அன்பர்தம் பிறப்பறுக்கும் வழுவா மருத்துவம். இதுவே அன்பர்க்கு ஏணிப்படி இடும் அருட்பதத்தின் அழகு. இதுவே துன்பக்கடலில் அகப்பட்டிருக்கும் அன்பர்க்குத் திருவடி செய்யும் தோணித்தொழில். இதுவே தன் நிழலில் அன்பரை இருத்தி ஆறியிருக்கச் செய்யும் திருவடி மாண்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உலகில் எத்தரத்தினருக்கும் இன்பமோ அல்லது துன்பமோ நிலையான சொத்து அல்ல. எவ்வெத் தரத்தினருக்கும் அவ்வத் தரத்திற்கேற்ப இன்பமும் துன்பமும் உண்டு. ஆகவே எமக்கு மட்டும் ஏன் இவ்வாறு துன்பமாய் நிகழ்கின்றன என்று அச்சமுறவோ, கவலையுறவோ தேவையில்லை.

"சுகதுக்கங்கள் வந்து போகும். நிலையானவை அல்ல."
"இரவும் பகலும் வந்துபோவது போல இன்பதுன்பங்கள் வந்து போகட்டும். பயப்படாதே"
"இன்பமும், துன்பமும், இகழும், புகழும் மாறி மாறி வரும். இவற்றைக் கண்டு அஞ்சப்படாது."

இவையிரண்டும் எம்மைப் பக்குவப்படுத்தும் பொருட்டு இறைவன் எம்மீது காட்டும் அலகிலாக் கருணையின் வெளிப்பாடுகளே. தாய் தன் பிள்ளைகளைக் கட்டியணைத்து முத்தமிட்டு அன்பு பொழிவாள். அதே பிள்ளை குறும்புகள் செய்யுமிடத்து, பிள்ளையைத் திருத்துவதற்காகக் கோல் கொண்டு கண்டிப்பாள். தாய் காட்டும் அன்பும், கண்டிப்பும் போன்றதே இறைவன் உயிர்களுக்குக் கொடுக்கும் அறக்கருணையான இன்பமும் மறக்கருணையான துன்பமுமாம். உண்மையில் நாம் அநுபவிக்கின்ற இத்துன்பங்கள் யாவும் எம் கன்ம வினைகளை நீக்குதற்குரிய இறைவனின் மறக்கருணைகளாகவே அமைகின்றன.

"துன்பம், நோய் யாவும் நன்மைக்கே வருகின்றன். வியர்வை வெளிவர வேண்டும். அற்றேல் வருத்தம் வரும்."
"மனிதன் துன்பமுறவேண்டும். துன்பமுறுதலே சிறந்த பரிகாரம்."

இன்பமும் துன்பமும் புறத்தேயுள்ள இவ்வுலக விடயங்களில் இருந்தே தோன்றுவதாகவே நாம் எண்ணுகின்றோம். ஆனால் இவ்விரண்டும் எம்மனத்திடை இருந்தே எழுகின்றன. உலகப்பற்றுக் காரணமாக சார்பு நோக்கே எம்மில் அதிகரித்துள்ளது. சார்பு நோக்கு என்பது ஒன்று சார்பாக மற்றையதை எடைபோடுவது ஆகும். இச்சார்பு நோக்குக் காரணமாகவே நன்மை-தீமை, உயர்ந்தவர்-தாழ்ந்தவர், ஏழை-பணக்காரர், நல்லவர்-கெட்டவர் போன்ற இருமை இயல்புகளை உருவாக்கிக் கொள்கின்றோம். இவ்விருமை இயல்புகளினால் வேண்டுதல் வேண்டாமையை எம்மில் வளர்த்து, அதன் மூலம் இன்பதுன்பங்களைப் பெருக்கிக் கொள்கின்றோம். வேண்டுவது கிடைக்கின் இன்பம், கிடைக்காவிடின் துன்பம் என்பதே எம்வழக்காயிற்று.

"இன்பமும் துன்பமும் மனத்திலேயே உள்ளன."

"எல்லாமவன் செயல் எல்லாமவன் வடிவு" என்னும் ஞானிகளின் அருமைத்திருவாக்கினை மறந்து, எம்வலத்தாலாகுமெனவெண்ணும் நோக்கமே நாம் எதிர்நோக்கும் இன்ப துன்பத்துகளுக்கு ஏதுக்களாம்.

"அறியாமையே எங்களை இன்பதுன்பங்களில் மாட்டி விடுகிறது."

ஆன்மீக வழியிற் செல்லுமொருவரின் மனத்தினை எவ்வாறு காமாதி குணமெல்லாம் பகிர்முகமாக்க வழிவகுக்குமோ அவ்வாறே இவ்வின்பதுன்பங்களும் மனத்தினை மாசடையச் செய்யும். ஆகவே செயல்கள் யாவும் இறைவனுடையதே எனக் கண்டு இவ்வின்பதுன்பங்களில் தாக்குறாது இருத்தல் வேண்டும்.

கருமுகிலும் வெண்முகிலும் வெவ்வேறு அளவினதாய் வந்து போனாலும் வானில் மாற்றம் ஏற்பட்டதுண்டோ? இல்லை. இவை போன்றே இவ்வின்ப துன்பங்கள் நித்திய ஆன்மாவாகிய எம்மில் எதுவித மாற்றங்களையும் ஏற்படுத்தா.

"இன்பதுன்பமெல்லாம் முகிலைப்போல வந்து போகட்டும்"

எத்தனையோ இன்பதுன்பங்களை அநுபவித்தும் நாம் நாமாகவே இருப்பதை நன்குணரலாம். ஆகவே இன்பதுன்பம் என்பதும் இச்சடவுலக மாயாகாரியங்களில் ஒன்றே. இவற்றினுள் தாக்குறாது ஆன்மாவில் நிலைத்திருக்கவேண்டும்.

"இன்பமும் துன்பமும் உலகவியற்கை. அவற்றைப் பார்த்துக் கொண்ட சும்மா இரு"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலை மந்திரம்



## கடவுளை வழிபடு

கடவுளை மனம் வாக்குக் காயத்தாலே காலை, மாலை, உச்சி, என்னும் மூன்று காலத்திலும் வழிபடல் வேண்டும்.

-நற்சிந்தனை-

நமது உயிருக்கு உயிராயிருப்பவர் கடவுள். உலகம் முழுவதற்கும் உயிராயிருப்பவரும் கடவுளே. அவரே எல்லோருக்கும் அம்மையப்பர். அவர் நம்மீது அன்னையினும் மிக்க அன்புடையவர். தந்தையினும் மிக்க பரிவுடன் நம்மை வளர்த்து ஆளாக்குபவர். அவர் சர்வ வல்லமையுடையவர். அவர் நினைத்தால் எல்லாம் நடக்கும். ஆதலால் நாம் நல்லவண்ணம் வாழ அவரை வழிபடல் வேண்டும்.

கடவுள் நமக்குப் பெறுதற்கரிய மனிதப்பிறவியைத் தந்திருக்கின்றார். வணங்கத்தலையும், வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சமுமுடையவர்களாக நம்மைப் படைத்திருக்கின்றார். ஆதலினாலே அவரை மனத்தினால் நினைந்துருகி வழிபடுதல் வேண்டும். வாயினால் பத்தியாகப் பாடிப் பரவுதல் வேண்டும். தலையினால்த் தாழ்த்திவணங்கிக் கைகூப்பித் தொழுதல் வேண்டும். காலைப் பொழுது கடவுள் படியளக்கும் நேரம் என்பர். எல்லா நாள்களிலும் நண்பகல் வேளை சுபவேளையாகும். மாலை நேரம் பகற்போது முழுதும் ஆடிமுடிந்து அடங்கியிருக்கும் காலம். ஆதலினால் இம்மூன்று வேளையும் ஆறியிருந்து கடவுளை மனம் வாக்குக் காயங்களால் வழிபட்டு அருள்பெறுதற்கான காலங்கள். நம்முன்னோர் விடியும் முன்எழுந்து கை கால் முகம் கழுவி சிவசிவா என்று நீறணிந்து கோலமலரெடுத்துக் கும்பிட்ட பின்னரே அன்றாட வேலைகளைச் செய்யத் தொடங்கினர். நண்பகற்போதில் மலர்பறித்து வழிபட்ட பின்னரே மதிய உணவு அருந்தினர். மாலைக்காலத்தில் நம் தாய்மார் வீடுகளில் விளக்கேற்றி வழிபடுவதை இன்றும் காண்கிறோம். ஆதலினால் நம்முன்னோர் நடந்த முறைப்படியும் பெரியோர் சொன்ன சொற்படியும் கடவுளை மூன்று காலத்தும் மனம் வாக்குக் காயங்களாலே வழிபடுவது நாம் நல்லவண்ணம் வாழ உதவும்.

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

வாயே வாழ்த்து கண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய்

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
ஆக்கையாற் பயனென்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஔவை மொழியும் வள்ளுவர் குறளும்



"ஔவை உரவை அரிய திருவள்ளுவரைத்
தெய்வமொழி போற்றுவதே சீர்" —நற்சிந்தனை—

ஆத்திசூடி

**ஆறுவது சினம்**

கோபம் மூளும் வேளையில் ஆத்திரப்பட்டுக் கோபம் சீறிப் பொங்குவதற்கு இடம் கொடாது ஆறுதலாயிருப்பது நன்று. கோபத்தைத் தற்காலிகப் பைத்தியம் என்பர். கோபம் பொங்குமிடத்துப் புத்தி கெடுவதால் புத்தியில்லாது செய்யும் கோபச்செயல்கள் பைத்தியகாரச் செயல்களேயாம். ஆதலினால் கோபம் பொங்கி எழுந்து புத்தியைக்கெடுக்க விடாது புத்தியால் கோபத்தைக் கொல்லுதல் வேண்டும். அது எவ்வாறெனில் கோபம் மூளும் குறிதோன்றும் அக்கணத்தே இதன் விளைவு கேடாய் முடியுமென்று தெளிந்த புத்தியுடன் மனங் கொதியாமலும் சுடுசொல் சொல்லாமலும் கெடுதி செய்யாமலும் ஆறியிருப்பதேயாம்.


திருக்குறள்

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

தன்னிலும் மெலியார் மீது கோபம் ஏற்படுமிடத்து அதை அடக்குதல் வேண்டும். (ஏனெனில் அவர்களிடத்தில் கோபத்தைச் சாதிக்க முடியும்: ஆதலால் அவர்கள் வருந்துவர். அது மெலியாருக்குத் தீங்கு செய்த தீவினையாக விளையும்.) தன்னிலும் வலியார்மீது கோபம் ஏற்படும் பொழுது அதனை அடக்கினாலும் ஒன்றுதான். அடக்காவிட்டாலும் ஒன்றுதான். அடக்காவிட்டால் வலியாரிடம் நமது கோபம் பலிக்காதாதலால் அதனால் ஒரு தீங்குமில்லை. பலிக்காத கோபத்தை அடக்குவதும் ஆற்றாமையேயாதலால் அதனாலும் பயனில்லை.

## அடியாரை வழிபடுவோம்

பத்திரமும் சுத்தியும் வேண்டா மக்கட்கள்
சுத்தச் சரியை நலமே. —நற்சிந்தனை—




எறிபத்தர் குருபூசைத் தினம்: மாசி அத்தம் (08-02-2010)
இறைவனுக்குச் சாத்துவதற்காகச் சிவகாமியாண்டார் கொண்டு சென்ற பூக்கூடையைப் பட்டவர்த்தன யானை சிந்திவிட, எறிபத்தர் தன் மழுவினால் யானையையும், பாகரையும் கொன்றொழித்தார். பூக்கூடையைச் சிந்திய அபராதத்திற்கு யானையையும் பாகரையும் மட்டுமல்ல என்னையும் கொல்லவேண்டுமென்று தம் உடைவாளை நீட்டிய புகழ்ச்சோழரின் அன்பின் நிலை கண்ட எறிபத்த நாயனார் அவ்வுடைவாளை வாங்கித் தன் கழுத்தில் பூட்ட முயன்றபொழுது புகழ்ச்சோழர் எறிபத்தரின் கையையும் வாளையும் பிடித்தன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரி நாயனார்
மூவேந்தர் மகிழும் வண்ணம் கவிபாடிப் பெற்ற பெருநிதி கொண்டு திருக்கோயில் அமைக்கும் பணி செய்த காரி நாயனார்.
குருபூசைத் தினம்: மாசி பூராடம் (10-03 2010)




கோச்செங்கட் சோழநாயனார்
முற்பிறப்பில் வெண்ணாவலின் கீழிருந்த பெருமானுக்குச் சருகு விழாத வண்ணம் மேற்கட்டியமைத்த சிலந்தி, பின்னர் இறையருளால் கோச்செங்கட் சோழராக அவதரித்து, பெருமானுக்கு மாடக்கோயில் பலவற்றைக் கட்டித் திருத்தொண்டு செய்தவர்

குருபூசைத் தினம்: மாசி சதயம் (24-03 2010)




நேசநாயனார்
மனத்தின் செய்கை சிவனடியார் சிந்திப்பதாகவும் வாக்கின் செய்கை அஞ்செழுத்தை ஓதுவதாகவும் கையின் செய்கை தம்பிரான் அடியவர்க்கு உடை நெய்வதாகவும் வாழ்ந்த நேச நாயனார்.

குருபூசைத் தினம்: பங்குனி ரோகிணி (22-03-2010)



கணநாத நாயனார்
திருத்தோணிபுரத்தில் வீற்றிருக்கும் அம்மையப்பருக்குப் பூமாலை புனைதல், திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருமஞ்சனம் கொணர்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுத் தொண்டரைப் பயிற்றும் கணநாத நாயனார்.
குருபூசைத் தினம்: பங்குனித் திருவாதிரை (24-03-2010)



முனையடுவார்
இந்நாயனாரிடம் பகைவர்க்குத் தோற்றவர்கள் வந்து தம்பக்கமாகப் போர்முனை சென்று வெற்றிபெறத் துணை வேண்டினால் அவர்களிடம் கூலி பேசி, போர்முனை சென்று வெற்றியீட்டிப் பெறும் பெருநிதி கொண்டு சிவனடியார்க்கு வேண்டுவனவும் திருவமுதும் அளிக்கும் திருத்தொண்டு செய்தமையால் முனையடுவார் என்னும் திருநாமம் பெற்றார்.

குருபூசைத் தினம்: பங்குனி பூசம் (28-03-2010)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்காலம்மையார்

இறைவா நீ ஆடும்போது உன்னடியின் கீழிருக்கவேண்டும் என்ற அம்மையாரின் வேண்டுகோள் பலித்தது.

குருபூசைத் தினம்: பங்குனிச் சுவாதி (01-04-2010)





தண்டியடிகள்


கண்பார்வையிழந்திருந்தும் கயிறுபிடித்துக் குளங்கல்லிய நாட்டமிகுதண்டி அமணர் தமக்கிழைத்த தீங்கினையும் தான் செய்த சபதத்தினையும் அரசனுக்கு எடுத்துரைத்ததுடன், அவர் அத்திருக்கோயில் குளத்தில் மூழ்கிக் கண்பார்வை பெற்ற பின் கண்குருடான அமணர்களை அரச கருமம் செய்வார் திருவாரூரை விட்டகற்றுவித்தார்.

குருபூசைத் தினம்: பங்குனிச் சதயம் (11-04-2010)

சிறுத்தொண்டர்

வைரவசுவாமிக்குத் திருவமுது செய்வதற்கு அவர் வேண்டியவண்ணம் வெண்காட்டு நங்கையார் தன்மகனை சீராளதேவனை மடியில் வைத்துக் கால்களைப் பிடித்திருக்க மகிழ்வுடன் தலையரியும் சிறுத்தொண்ட நாயனார். அருகில் அரிந்த தலையை ஏந்த ஆயத்தமாகும் சந்தன நங்கையார். வைரவசுவாமி கணபதீச்சரக் கோயில் திருவாத்தி மரத்தின் கீழ் அமர்ந்திருக்கிறார்.

குருபூசைத் தினம்: சித்திரை பரணி (16-04-2010)






மங்கையர்க்கரசியார்

திருஞானசம்பந்தப்பிள்ளையாரின் அருளால் சைவரான பாண்டிய மன்னனும், சம்பந்தப்பிள்ளையாரைப் பாண்டி நாட்டுக்கு அழைத்த மங்கையர்க்கரசியாரும், மங்கையர்க்கரசியாரின் பணிப்பின்படி அவரை அழைத்து வந்த மந்திரி குலச்சிறையாரும் பக்தியாய்ப் பணிந்து வழிபடல்.

குருபூசைத் தினம்: சித்திரை ரோகிணி (18-04-2010)

விறன்மிண்ட நாயனார்

தேவாசிரிய மண்டபத்தமர்ந்திருக்கும் திருக்கூட்டத்தை வணங்காது சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கண்டு "அவரையும் புறகு அவரையாள் ஆண்ட சிவனும் புறகு" என்றுரைக்கும் விறன்மிண்டர்.



குருபூசைத் தினம்: சித்திரைத் திருவாதிரை (20-04-2010)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குருநாதனது அநுபவசித்தாந்தம்:

## ஓர் ஏழைத் தொழும்பனின் நோக்கு

எங்கள் குருநாதன் சந்ததம் மோனநிலை தவறாத ஞானநிட்டர். அவரது அகம் திரையற்ற நீர்போல் உபசாந்தமாயிருந்தது. அவரைத் தாகமாக நாடிவந்த அன்பாளரது உள்ளங்கள் அவரது பளிங்கு போன்ற அகத்தில் தெளிவாய்ப் பிரதிபலித்தன. பிரதிபலித்ததும் கருணையேவடிவான அவரிடம் இருந்து அன்பரது தாகத்தைத் தணிக்கும் ஞானபானம் சுரந்தது. இவ்வாறுமலர்ந்தனவே எங்கள் குருபரனது திருவாய் மொழிகள். இத்திருவாய்மொழிகள் ஏறக்குறைய நானூறு பக்க அளவினதான நற்சிந்தனைத் திருநூலாகவும், அரும் பெறல் மணியனைய ஆயிரக்கணக்கான அருள்மொழிகளைக் கொண்ட "எங்கள் ஆசான் அருள்மொழிகள்" என்னும் ஞானக்களஞ்சியமாகவும் தொகை செய்யப்பெற்றிருக்கின்றன.

எங்கள் சுவாமிகளை நாடிவந்த அன்பர்கள் அனேகர். அவர்களில் இகசுகத்தை நாடிவந்தோர் பலர். பரசுகத்தை நாடிவந்தோர் சிலர். பரசுகத்தை நாடிவந்தோரிலும் மந்ததரத்தினர் முதல் தீவிரதரத்தினர் வரை பலபடித்தரத்தினர் இருந்தனர். இவர்களின் படித்தரத்திற்கேற்பவே சுவாமிகளிடமிருந்து திருவாய் மொழிகள் மலர்ந்தன. இதனால் இவ்வாய்மொழிகளிலே மேற்படியிலுள்ளோருக்கு முரணாகாமலும் கீழ்ப்படியிலுள்ளோர்க்கு முரண்படுவனபோலவும் தோன்றும் சில மொழிகள் உள்ளன. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்றோர் மொழியும் உளது. முன்னிலை இன்றித் தன்னிலையில் யாவும் என்றோர் மொழியும் உளது. அவனியனைத்தும் பொய் பொய் பொய் எனும் மொழியும் உளது. அண்டபிண்டம் அடங்கலும் அதுவே எனும் மொழியும் உளது. எழுகபுலருமுன் ஏத்துக பொன்னடி என்றோர் மொழியுடன் ஆதாரம் ஆதேயமான வப்பனுக்குப் பாதாரவிந்த மெங்கே பார்த்துப் பணிவதெங்கே என்றோர் மொழியும் உளது. இவ்வாறு வேறுபடும் மொழிகளையெல்லாம் உற்றுநோக்கித் தெளிவோர் இவற்றில் ஒரு வேறுபாடு-மில்லையெனவும் இவை அற்புதவனப்புடன் ஒன்றில் ஒன்றியுள்ளன எனவும் கண்டுகொள்வர். வேறுபாடுகள் அவரவர் பக்குவத்திற்கு ஏற்றவண்ணம் சுரந்தமையால் நேர்ந்த வேறுபாடுகள் எனவும் ஞானத்தின் திருவுருவான சுவாமிகளது பூரணஞானம் இவ்வேறுபாடு-களனைத்தையும் செம்மையாகத் தன்னுள் அடக்கியிருக்கும் வனப்பினது என்பதையும் கண்டு நயப்பர். சருக்கரைப் பொம்மையின் தொட்ட தொட்ட இடமெல்லாம் ஒரே இனிப்பே சுவைப்பது போன்று சுவாமிகளது திருவாய் மொழிகளிலெல்லாம் ஒரே மோன ஞானமே தித்திக்கின்றது. இகசுகத்தை நாடிவந்த அன்பாளர்பொருட்டுச் சுரந்த மொழிகளிலும் சுவாமிகளின் அநுபவசித்தாந்தத்தின் மணமே கமழ்கின்றது.

அநுபவசித்தாந்தம் தத்துவாதீதமானது. அது தத்துவக்கணக்கரால் அளந்தறிய ஒண்ணாதது. மலைவலம் வருவோர் திருவண்ணாமலையை நோக்குவது போன்றதே அநுபவசித்தாந்தத்தை அறிந்துகொள்ள முயல்வதாகும், பஞ்சமுகம் கொண்ட அம்மலையைப் பார்ப்போர் தாம் எத்திக்-கினின்று பார்க்கின்றனரோ அத்திக்கில் தெரியும் காட்சியையே பார்ப்பர். அவ்வண்ணமே சுவாமிகளது அனுபவசித்தாந்தமான திருவாய்-மொழிகளை நோக்குவோரும் தம் சத்திய தாகத்துக்கும் சாதனை மலர்ச்சிக்கும் ஏற்ற விளக்கங்களையே பெறுவர். இவ்வாறெல்லாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றும் அச்சங்களுடனேயே இச்சிற்றுரை எழுதப்படுகின்றது.

***நுழைவாயில்***

சுவாமிகளது அநுபவசித்தாந்த மாளிகைக்குள் நுழைவதற்கு சிவதொண்டன் என்னும் திருநாமம் தக்கதொரு நுழைவாயில் எனத் தோன்றுகின்றது. எங்கள் குருநாதன் இம்மெய்மொழியைத் தத்துவச்செறிவுடைய ஒரு பெருமொழியாகக் கொண்டார். அவர் தமது அன்பாளர்கள் இடைவிடாது நற்சிந்தனை செய்வதற்குவாய்ப்பாகத் திங்களேடு ஒன்றைத் தொடங்கியபோது அவ்வேட்டிற்குச் சிவதொண்டன் என்றே பெயர் சூட்டினார். இத்திருப்பெயர், ஏடு ஏந்திவரும் கட்டுரைகள் (உறுதிமொழிகள்) அனைத்தையும் அடக்கிநிற்கும் பெரும்பெயர் என்பதை அறிந்தே இவ்வாறு சூட்டினார். அன்பரெல்லாம் சாதித்தும் போதித்தும் கடைத்தேறுதற்கான தவச்சாலை ஒன்றைத் தொடங்கியபோது அதற்கும் சிவதொண்டன் நிலையம் என்றே திருநாமம் சூட்டினார். அன்பருஞற்றும் சாதனைகளதும் பெறும் போதத்தினதும் செறிவு இத்திருநாமத்தில் உள்ளமையாலேயே இவ்வாறு பெயர் பொறித்தனர். அன்றியும் சுவாமிகளது திருநாமத்துடன் சிவதொண்டன் என்னும் திருப்பெயர் ஒன்றித்து நிற்பது போன்று அவர்தம் அநுபவசித்தாந்தத்துடனும் இயைந்திருத்தல் இயல்பேயாம். ஆதலால் 'சிவதொண்டன்' என்னும் மெய்ம்மொழியூடாகச் சுவாமிகளது அனுபவசித்தாந்தத்தை அறிய முயல்வது பொருத்தமானதேயாம்.

### 1. *சிவதொண்டனின் உண்மைச் சுபாவம்*

***இறைவனின் அடிமை உடைமை***

சிவதொண்டன் எனும் மெய்ம்மொழியின் தத்துவ அடிப்படை சீவன் சிவன் என்பது. அதாவது நமது உயிருக்குயிராக இருப்பவர் கடவுளே என்பது. சீவனின்றி நாமில்லை யாதலால் சீவனாகிய சிவனின்றி நாம் என ஒரு முதலில்லை என்பது தெளிவு. இவ்வாறே சீவனின்றி நமக்கு இயக்கமில்லையாதலால் சீவனாகிய சிவனின்றி நமக்கொரு செயலுமில்லை என்பதும் தெளிவு. இவ்வண்ணம் சந்ததமும் எனது செயல் நினது செயல் நான் எனும் தன்மை நினையன்றி இல்லை எனத் தெளிந்தவன் சிவதொண்டன். இத்தெளிவு சிவதொண்டனின் பூரண ஒப்படையை உணர்த்துவது. ஆகவே சிவதொண்டன் என்பவன் "இறைவா நான் உனது அடிமை, உடைமை உன் திருவடியே தஞ்சம்" என்று வாழ்பவன்.

***இறைவனின் வேறலாதவன்***

இவ்வொப்படையின் பேறு என்னவெனில் இறைவனைத் தன்னிடம் பெற்றுக் கொள்ளுதலாகும். அதாவது "தந்ததுன் தன்னைக் கொண்டதென்தன்னை" என்ற திருவாசகப்படி தன்னைக் கொடுத்து இறைவனைப் பெற்றுக்கொள்தலாகும். தன்னைக் கொடுத்தலால் தற்சுட்டு இறக்கிறது. தற்போதம் ஒழிகிறது. கீழ்மைக்குணங்கள் அகல்கின்றன. இறைவனைப் பெற்றுக் கொள்தலால் சிவபோதம் புகுகின்றது. மேலான தெய்வதத்துவம் பொருந்துகிறது. சுட்டிறந்து தெய்வதத்துவத்தை அடைதலால் 'இறைவ நான் உன்னிலும் வேறலேன்' என்று சொல்லும் தெளிவுடையவனாகச் சிவதொண்டன் பரிணமிக்கின்றான்.

***சிவ ரூபம்***

சிவதொண்டனது இருப்புக்கும், செயலுக்கும் சிவனே காரணமாதலாலும், அவன் சிவனிலும் வேறலாதவனாகப் பரிணமித்துள்ளவனாதலாலும் அவனைச் சிவரூபன் என வழங்குவதும் பொருந்துவதே

***ஒரே ஆள்***

தன்னை இறைவனுடைய அடிமை உடைமையாகவும் இறைவனின் வேறலாதவனாகவும் சிவரூபமாகவும் கருதும் சிவதொண்டன் மற்றையோரையும் தன்னைப்போன்ற சிவதொண்டனாகக் காணும் கண்படைத்தவனாகின்றான். அதாவது மற்றைய யாவரது சீவனும் சிவனேயென்றும் சிவனையன்றி அவர்களில்லையென்றும்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன்செயலன்றி அவர்களுக்கெனச் செயலில்லையென்றும் அவர்கள் சிவனிலும் வேறலர் என்றும் அவர்களது ரூபம் சிவரூபமேயென்றும் துணிந்துகொள்கின்றான். இவ்வண்ணமே மாந்தர் மாத்திரமன்றி மற்றைய நிற்பனவும் நடப்பனவுமான உயிர்த்திரள் அனைத்தையும் சிவதொண்டனாகவே கருதுகின்றான். தனது வாழ்முதற்பொருளாக எந்த மெய்ப்பொருள் உளதோ அதுவே ஆருயிர்தோறும் அதுவதுவாய் நிற்கும் பேருயிர் எனத் தெளிந்து கொள்கின்றான். அப்பேருயிரான பெருமானுடன் வேறலாது நிற்கும் சிவதொண்டன் பெருமான் செறிந்து நிற்கும் உயிர்களெல்லாவற்றிலும் தானும் செறிந்து நிற்பதை உணர்கின்றான். இவ்வுணர்ச்சியினாலே தன்னில் எல்லாரையும் எல்லாரிலும் தன்னையும் காணவல்லவனாகின்றான். தனது சீரகமுள்ள சீவான்மாவே பாரகம் எங்கும் பரந்திருக்கின்றது என்பது அவனது தாரகமாகின்றது. இத்தாரகத்தினாலே தன்னுயிர்போல மன்னுயிரனைத்தையும் நேசிக்கும் பேரன்புப் பெருக்கு அவனது இயல்பாக அமைகின்றது. இப்பேரன்பினாலே நாங்களெல்லாம் ஒரே சாதியையும் சமயத்தையும் சார்ந்தவர்களாக உள்ளோம் என்றும் எங்களுக்குள் ஒருவிதமான மாறுபாடுமில்லையென்றும் கூறமுடிகின்றது. இந்த உண்மைச்சுபாவத்தின் உறைப்பினாலே நாம் எனும் எழுவாயை உளேன் எனும் ஒருமையால் முடித்து 'நாம் உளேன்' (We *is*) என அவன் கூறுவான். இந்த ஒருமைத்தன்மையால் 'நாங்களெல்லாம் ஒரே ஆள்' என்பது சிவதொண்டனின் ஞானத் தெளிவாக அமைகிறது.

### *இந்த உலகமும் சிவதொண்டன் என்னும் ஒரே ஆளின் அங்கமே*

ஐம்பூதத்தியற்கையாயும் ஐம்பூதத்தியற்கையாலான கடல், மலை ஆகியனவாயும் சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் ஆகியனவாயும் உள்ள உலகுக்கு உயிராயுள்ளவரும் இறைவனே. இறைவனையன்றி இயற்கையில்லையாதலால் இயற்கையை இறைவடிவம் என்பது ஒருவகையில் பொருந்துவதே. இறைவடிவான இயற்கையும் சிவதொண்டே புரிகின்றது. சந்திரன் சிவதொண்டு புரிகின்றது. சூரியன் சிவதொண்டு செய்கின்றது. கடல், மலை யாவும் சிவதொண்டே செய்கின்றன. ஆதலால் நீள்கடலும், மலையும், விசும்பும் ஆகிய இயற்கை சிவதொண்டன் என்னும் ஒரேயாளின் கூட்டமே.

### *மாயாசாலத்தால் அலைக்கழிக்கப்படாதவன்*

நாமெல்லாம் ஒரே ஆள் என்பதும், நம்மில் ஒருவித மாறுபாடுமில்லை என்பதும் நமது உண்மைச்சுபாவ மெனின் பெரியவன், சிறியவன், மடையன், ஞானி, நல்லவன், கெட்டவன் என்ற மலை மலையான பேதங்கள் எல்லாம் எவ்வாறு தோன்றுகின்றன? யாவும் சிவதொண்டே புரிகின்றன எனின் வஞ்சம் பொறாமை, கோபம், கலகம், சண்டை, போர், களவு, கொலை, புலை ஆகிய தீயகுணங்களும் அவச்செயல்களும் எங்ஙனம் பெருகின? இவ்வினாக்களுக்கான விடை இவையெல்லாம் ***உண்மைச்சுபாவத்தின் சிறப்பியல்புகள்*** என்பதே. இச்சிறப்பியல்புகளைப் பெரியோர் மாயை என்பர். மாயை எமது உண்மைச் சுபாவத்தை மறைத்துப் பொய்யாயினவற்றைத் தோற்றச்செய்கின்றது. மாயை வலைப்பட்டோருக்கு இம்மாயத் தோற்றங்களெல்லாம் கடத்தற்கரிய கடலெனத் தோன்றும். உண்மைச் சுபாவத்தில் உறைத்து நிற்போர்க்கு ஈதெல்லாம் வெறும் கானல் நீர். கானல் நீரால் நிலம் கரையுமோ? வெப்பம், தட்பம், இன்பம், துன்பம், ஆகிய பிரகிருதியின் குணங்கள் எமது உண்மைச் சுபாவத்தைத் தீண்டா. சித்துப்பொருளான சிவதொண்டனைச் சடதத்துவங்கள் தாக்கமாட்டா.

### ***2. முன்னிலை***

இதுவரைக்கண்ட விளக்கப்படி சிவதொண்டனின் உண்மைச்சுபாவம் சிறப்புடையதே. ஆயினும் இவ்விளக்கத்தில் இறைவன், இறைபணி நிற்பவன் எனும் இருமை நிலை உளது. இறைவன் உடையவன்: சிவதொண்டன் உடையவனின் அடிமை உடைமை; இறைவன் முதற்பொருள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதொண்டன் அம்முதற்பொருளைச் சார்ந்துநிற்கும் சார்புப் பொருள். இறைவன் ஆதாரம்; சிவதொண்டன் அவ்வாதாரத்தை இடமாகக்கொண்ட ஆதேயம். இறைவன் பரமவஸ்து சிவதொண்டன் அப்பரமவஸ்துவின் திருமுன்னிலை. இவ்வண்ணமான இருமையைக் கடந்து நிற்கும் ஒருமையின் பெருநிலை ஒன்றும் உளது. அப்பெருநிலையே தன்னிலை. அதாவது ***முன்னிலையிலன்றித் தன்னிலையில்*** யாவும் என்பது.

### 3. தன்னிலை

நாம் தெய்வத்துக்குப் புறத்தாராக இல்லை; தெய்வத்துள் வைக்கப்பட்டவர்களாகவே உள்ளோம். பாராதிபூதமான உலகும் இறைவனுக்குப் புறத்தேயில்லை. இறைவனுக்குள்ளேயே உள்ளது. உலகினைப் பலப் பல கோலங்களாக் காட்டிச் சாலம் செய்யும் மாயையும் பேயொடு காட்டிலாடும் பிரானது வேடிக்கையே. உயிரினை மாய உலகின்பால் ஈர்க்கும் ஊனநடனமும் இறைவன் பால் ஈர்க்கும் ஞானநடனமும் ஆடலரசனான அவனது தாண்டவமே. பசு, பாசம் என்பவற்றோடு பதியாய்த் தானொரு கோலங்கொண்டு முப்பொருளாய் நிற்பதும் மெய்ப்பொருளின் வேடிக்கையே. ***மெய்ப்பொருள் ஒன்றே உலகு, உயிர், பரம் என ஒளிர்கின்றது.*** (இந்த அநுபவசித்தாந்த உண்மையே வேதாந்தம், சித்தாந்தம் மற்றும் எத்தாந்தத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டு தான் தத்துவாதீதமாய் ஓங்கி நிற்பதை நன்கு காட்டுகின்றது) ஆகவே ***முழுதும் உண்மை.*** முழுதும் உண்மையாதலாலே இங்கு ***ஒரு பொல்லாப்பும் இல்லை.*** இது என்றும் இப்படியே. மெய்ப்பொருள் கதிரவன் போன்று உள்ளது. கதிரவனின் கதிர்விளக்கம் போல் உலகுயிர்பரமாதியன பொலிந்து தோன்றுகின்றன. இது ***எப்பவோ முடிந்தகாரியம். மெய்ப்பொருள்*** தான் தானாகவே இருக்கிறது. தன்னிடத்து ஒரு அசைவுமின்றித் தாணுவாய் இருந்தபடியே இருந்துகொண்டு உலகுயிர் ஆதியனவாய் வேடிக்கை செய்கின்றது. பிரமாண்டம் ஆன உலகு மெய்ப்பொருளின் மேனிப்பூச்சு எனும்படி பொடியாய்ச் சிறுக்கத் தான் பரவெளியாய் ஓங்கி நிற்கின்றது பெரிய பொருளான மெய்ப்பொருள். ***தானே தானாய் நிற்கும் மெய்ப்பொருளின் இம் மூல நிலையைத் திருவடி*** என அழைத்தல் தகும். இம்முண்டக மலர்ப்பதத்தைக் கண்டவர் மூவரும் தேவரும் முளைத்ததைக் கண்டவராகிறார். மூவரும் முளைப்பதற்கும் முந்திய நிலையில் சிருஷ்டியின் தோற்றம் நிலை ஒடுக்கம் ஒன்றுமில்லாத பாழ் வெளியில் ஒன்றையும் காணாதவராய் ஏங்கி நிற்கின்றார். அவரே மருமமெல்லாம் அறிந்தவர். தன்னையறிந்த இச் சிவதொண்டன் தன்னைக்கண்டவிடத்தில் கடவுளையுங் காணாதவனாயும் கண்ட தன்னையும் காணாதவனாயும் இருக்கின்றான். இதுவே ***நாமறியோம்*** என்னும் நல்லறிவு நிலை. இந்த நல்லறிவு வாய்ந்த சிவதொண்டன் நிட்டையிலே எந்நாளும் நிலைத்து நிற்கின்றான்.

### முடிவுரை

இச்சித்தாந்தப்படி வாழும் சிவதொண்டனின் அனுபவம் மேல்வருமாறு அமையும். அவன் தன்னிலையில் யாவும் என்ற முழு உண்மையை உணர்ந்து, தானான தன்னிலையில் தனித்திருக்கும் பொழுது, சந்ததமும் மோனநிலை தவறாத ***உபசாந்தனாயிருப்பான்.*** உலகோடு ஒட்டிவாழுமிடத்து எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை எனத்தெளிந்து தன்னுயிர் போல மன்னுயிர் அனைத்தையும் நேசிக்கும் ***அன்பே வடிவினனாக அமைவான்.*** அவ்வுயிர்களது உண்மைச் சுபாவமும் உபசாந்தமே என்பதை உணர்த்தும் ***சிவதொண்டு புரிந்து திரிவான்.*** இவ்வண்ணம் உலகில் சிவதொண்டு புரியுமிடத்து உலகமாயையால் சற்றும் தாக்குறாது கானகத்தில் சிங்கம் உலாவுவது போல உல்லாசமாக உலவுவான். அவனுக்குத் தனிப்பட்ட ஒரு உலக வாழ்வுமுண்டு. அவ்வாழ்வு அரசவாழ்வாயினுமாக, ஆண்டிவாழ்வாயினுமாக ***பொருந்திய வாழ்வை மகிழ்வுடன் வாழ்வான்.*** ஆகவே சுவாமிகளது அனுபவ சித்தாந்தம் உண்மையைப் போல எளிமையானது. அதற்கோர் இலச்சினை பொறிப்பதாயின் சிவதொண்டன் என்னும் எளிய மெய்மொழியே பல்லாற்றாலும் பொருந்துவதாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

## சிவசிந்தனை

### சிதம்பர தரிசனம் காட்டிய குருவே

சிதம்பர தரிசனம் காட்டியே சிவ
பதமலர் சூட்டிய பரம குருவே
-சிதம்பர

நிதமு முன்னாமம் நினைந்திடச் செய்தே
இதய நடமிடும் என்னருட் குருவே
-சிதம்பர

பதமொன்றும் வேண்டேன் பணிந்திடல் வேண்டும்
பதமலர் நாளும்நான் பாடி யாடியே
-சிதம்பர

அன்னையிற் பெரிதும் அன்புடை அரசே
உன்னை மறந்தொரு கணமும் வாழேன்
-சிதம்பர

என்னை இங்கினும் இடர்பட விடாமல்
மன்னா மாதவா மாறா தருள்வாய்
-சிதம்பர

பொன்னம் பலத்துப் புனிதனும் நீயே
மன்னிய கலம்பக வாசனும் நீயே
-சிதம்பர

துன்னிய மருள்கெடத் தூக்கிய திருவடி
சென்னியில் வைத்தெனை யாளுவ தென்றோ
-சிதம்பர

பட்டது போதும் பரம சுகம் பெற
அட்டனே ஆண்டருள் அரகர சிவசிவ
-சிதம்பர

### ஒருவரும் துணையில்லை ஐயா

பல்லவி

ஒருவரும் துணையில்லை ஐயா
உன்னை யல்லாமல் மெய்யா!

அநுபல்லவி

இருவரும் தேடி ஏங்கினரே சகம்
வரும்குரு வருளினால் நல்லையில் வரம் பெற
- ஒருவரும்

சரணம்

மனிதரும் தேவரும் வணங்கிநின் றடிதொழ
குணம் பல காட்டியென் குறைகளை நீக்கினாய்
மனம் தெளிவாகவும் மௌனத்தில் தேங்கவும்
எனதுயா னெனும்செருக் ககலவும் அருளுவாய்
- ஒருவரும்

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விரோதி - விகிர்தி ஸ்ரீ
பங்குனி - சித்திரை மீ
2010 மார்ச் - ஏப்ரல்

# குருமணி

"கடவுளைத் தனதாக்கக்கூடாது" என்பது எங்கள் ஆசான் அருள்மொழி. இவ்வருள்மொழியைக் குறிப்பாய்க் கொண்டு "குருவைத் தனதாக்கப்படாது" எனக் கூறுவதும் தகுமே. எங்கள் குருநாதன் என்னும் வாசகம் எங்களுக்கெல்லாம் உடைமையானமொழி. இவ்வாசகத்தில் வரும் எங்கள் என்னும் சொல் சிவதொண்டன் வட்டத்தினர் என்ற அளவில் அடங்குவதன்று. அது ஈழநாட்டவர் என்னும் அளவினதுமன்று. அது அங்கும் இங்கும் எங்குமுள்ள உண்மை விரும்பிகள் அனைவரையும் உளப்படுத்தும் மொழியாகும். அவ்வண்ணமே குருநாதன் என்னும் மொழியும் மெய்ப்பொருளாயும், என்றும் ஒன்றுமாயும் தத்துவாதீதமாயும் விளங்கும் 'சிவகுரு'வையே குறிப்பதாகும். ஆகவே எங்கள் குருநாதன் என்னும் திருவாசகம் எங்கும் என்றும் உள்ள சத்தியமாய்க் கொண்டோர்க்கெல்லாம் சத்தியத்தைக் காணவைக்கும் அங்கும் இங்கும் எங்கும் அன்றும் இன்றும் என்றுமுள்ள தீர்க்கமான குருமணியைக் குறிக்கும் வாசகமேயாம்.

எங்கள் குருநாதன் யோகசுவாமிகளால் ஆளாக்கப்பட்ட உத்தமஞானியர் மூவருள் ஒருவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் என நாம் அறிவோம். நாம் சந்தசுவாமிகள் எனும் நாமத்தினால் வழங்கும் அவருக்குச் சுவாமிகள் சொன்ன மொழிகள் எங்கள் ஆசான் அருள்மொழிகள் என்னும் நூலின் ஆறாம் பகுதியாக உள்ளன. அப்பகுதியிலுள்ள முதன்மொழி

"ஆதியில் அச்சொல் இருந்தது. அச்சொல் இறைவனிடம் இருந்தது. அச்சொல்லே இறைவன்"

என்னும் கிறிஸ்தவ வேத வாக்கியமாகும். அப்பகுதியிலுள்ள இன்னொரு மொழி

"கவ்வடா மிருகம் போலிரு"

என்னும் ஆங்கில மரபு மொழியாகும். இவை போன்ற பைபிள் வாசகங்களாலும் ஆங்கில மொழி வழக்குகளாலும் சந்தசுவாமிக்கு உண்மைவிளக்கம் செய்து எங்கள் குருநாதனது திறத்தை எண்ணுகையில் அவர் சத்தியதாகம் கொண்டோரையெல்லாம் அவரவர் சொந்தப் பாத்திரத்தில் வைத்து வளர்த்து ஆளாக்கும் வல்லாளர் எனத் தெரிகிறது. சுவாமிகளை நாடிவந்த மேற்கு நாட்டவரில் இன்னொருவர் சுவாநிதி ஜோர்ஜ் அவர்கள். இலங்கையில் கனேடியத் தூதுவராக இருந்த அவர் தன்னையறியும் தாகத்துடன் சுவாமிகளை நாடிவந்தார். நம்மனோர்கள் ஆயிரக் கணக்காகச் சுவாமிகளிடம் சென்று வந்தனர். 'சுவாமிகளோ ஆயிரத்துள் ஒருவர் கூடத் தவத்தை நாடி வருகிறார்களில்லையே' என்றிரங்கினார். பலன் கருதி, உலகநலன் கருதியே நம்மவருட் பலரும் சென்றனர் போலும். ஜோர்ஜ் அவர்கள் 'நான் யார்?' என்பதை அறிந்து கொள்ளும் ஆசைப்பாட்டினாலேயே சுவாமிகளை நாடிவந்தார். சுவாமிகளும் "நல்லது இரு நான் யார் நான் யார்....... என்று உன்னுள்ளே, உன்னுள்ளே உள்ளே உள்ளே சென்று காண்" என்பதை அவ்வாறு கண்டுகொண்டிருப்பதன் சாட்சியாய உபசாந்த இருப்பில் இருந்து உணர்த்தினார். ஜோர்ஜ் அவர்களும் அந்தச் சாந்தச்சுவையைச் சற்றே அனுபவித்ததாகவும், அதிலே நிலைப்பதற்கு விழைவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். ஜோர்ஜ் அவர்கள் எங்கிருந்தோ பறந்து வந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்சிந்தனை

## சற்குரு தாள்கள் வாழ்க

அத்துவா மார்க்கமாறும் அகற்றியே யடியனேனைத்
தத்துவா தீதனாக்குஞ் சற்குரு தாள்கள்வாழ்க 1

ஆக்கைநீ யல்லைநீயோ ஆன்மாவென் றெனக்குச்சொல்லித்
தீக்கைவைத் தாண்டுகொண்ட தேசிகன் றிருத்தாள்வாழ்க 2

இருந்துபா ரென்றெனக்கோர் இனியநல் வாக்குத்தந்த
அருந்தவன் என்னும்வல்ல ஆசான்றன் தாள்கள்வாழ்க 3

ஈயாத புல்லர்தங்கள் இல்லத்திற் கேகாவண்ணம்
தாயாரைப் போல்வந்தாண்ட சற்குரு தாள்கள்வாழ்க 4

உன்மத்தன் போலேவந்தென் னுடல்பொரு ளாவிமூன்றும்
தன்னத்தம் வாங்கிக்கொண்ட சற்குரு தாள்கள்வாழ்க 5

ஊனுமாய் உயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகி
நானுமாய் நீயுமாகி நடஞ்செயுந் திருத்தாள்வாழ்க 6

எண்ணிய வண்ணம்வாழ எனக்குநல் லருளைத்தந்த
கண்ணிய முடையசெல்வன் கழலடி யென்றும்வாழ்க 7

ஏடவிழ் கோதைமாதர் எழில்கண்டு மயங்காவண்ணம்
தாடலை தன்னில்வைத்த சற்குரு தாள்கள்வாழ்க 8

ஐயமேன் காணுமென்றே அடியனேன் தன்னைநோக்கி
உய்யநல் லருளைத்தந்த உத்தமன் பாதம்வாழ்க 9

ஒருமொழி யதனாலென்னை ஓவியம் போலவாக்கி
வருபயம் நீக்கியாண்ட வள்ளல்தம் திருத்தாள்வாழ்க 10

ஓமெனும் எழுத்தினுள்ளே உலகெலாம் விளங்கக்காட்டி
நாமென்று சொல்லுகின்ற நற்றவன் றிருத்தாள்வாழ்க 11

ஔவன நல்லைதன்னில் அழகிய ஆடல்காட்டிச்
செவ்விதி னாண்டுகொண்ட செல்வன்றன் தாள்கள்வாழ்க 12

அஃகமுங் காசுந்தேடி அலைந்துநான் திரியாவண்ணம்
நஃகுதல் செய்தநல்ல நாதன்றாள் வாழ்க! வாழ்க! 13



நீயுமில்லை; நானுமில்லை; கடவுள் தான் இருக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பொய்கையில் மலர்ந்த செங்கமலப்பூவின் மோனத்தேனைப் பருகிச் சென்ற மதுகரத்தினைப் போன்று தோன்றுகிறார். நாமோ அப்பொய்கையில் வாழும் மண்டூ-கங்களாய் இருந்துவிட்டோமோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

சுவாமிகளை நாடிவந்த இன்னொரு மேனாட்டவர் ஸ்பானியாவைச் சேர்ந்தவர். அவர் அந்நாட்டின் [illegible] தூதுவராகப் பணிபுரிந்தவர். கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள் அவரைச் சுவாமிகளிடம் அழைத்துச் சென்றார். அவர் சுவாமிகளிடம் பெற்ற ஆன்ம அனுபவம் பற்றி விளக்கமாக இப்பொழுது அறியமுடியவில்லை. ஆயின் அவர் சுவாமி-களிடம் பெற்ற நற்சிந்தையுடன் ஸ்பானியா சென்றார். அங்கே ஒரு ஆச்சிரமம் அமைத்து அவ்வாச்சிரமத்தில் அமைதியாய் இருந்து வருவோருக்கு ஆறுதலாயிருக்கும் உபா-யத்தை உணர்த்தி வந்தார். இப்பொழுது அவர் வழியில் வந்த மூன்றாமவர் அவ்வாச்சிரமத்தில் உறைகின்றார்.

எங்கள் குருநாதன் தாம் திருவடிக்கலப்புறுதற்கு ஈராண்டுகளுக்கு முன் உலகநாடுகளுக்கான சிவதொண்டன் தூதுக்குழு ஒன்றை அனுப்பிவைத்தார். இது தாம் உணர்த்தி வைத்த உத்தம இரகசியம் உலகம் முழுவதற்கும் உரித்தானது என்பதன் ஓரடையாளமாகும். சுவாமிகளின் திருவாய் மொழிகள் உலகமொழியாகிய ஆங்கிலத்திலும் Sayings of Yogaswasmy, Words of our Master என்னும் இரு நூல்களாக உள்ளன. இவை சுவாமிகளின் அருளிச்செயல்கள் உலகம் முழுவதிலுமுள்ள உண்மை நாட்டமுடைய நூலறிவாளர் யாவர்க்கும் உரியன என்பதன் குறிப்பே. ஆதலால் ஸ்பானிய ஆச்சிர-மத்திலுள்ள உண்மையுணரும் அன்பாளர்கள் தமது மொழியிலே சுவாமிகளின் திருவாய்-மொழிகளைப் பெயர்த்துக் கற்றுச் சாதனை செய்து உய்திகூட முயல்வதில் நூதன-மொன்றுமில்லை. சுவாமிகள் ஓரிடத்தில் "சும்மா கிழிக்கும் கிழங்கிற்கு ஆப்பும் சுத்தியலும் எடுத்த கதைதான் நூல்களுக்கு எழுந்த உரைகள்" எனக் குறிப்பிட்டுள்ளார். சுவாமி-களோ உண்மை நூல்கள் கூற முயலும் இரகசியத்தை சும்மா -சிரமமின்றி- எளிதான இன்னுரையில் கூறியிருக்கின்றார். இவ்வாறு கூறியிருக்கும் திருமொழிகள் எங்குமுள்ள உண்மைவிரும்பிகளை எளிதாய் ஈர்த்தெடுக்கும் என்பதில் இருகருத்தில்லை.

இவ்வாறெல்லாம், ஓர் உலககுருவாக விளங்கும் எங்கள் குருநாதன் பற்றி எண்ணமிட்டுச் செல்கையில் கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படலத்திலுள்ள ஒரு விருத்தம் நினைவு வருகிறது. அவ்விரு-த்தத்திலே தேவாதிதேவனை அறுமுகப் பெருமானின் தேவியாயிருக்கும் வள்ளி-நாயகியைக் காட்டகத்துவேடர் தினைப்புனங் காக்க இருத்தியமை காட்டிற் கிடைத்த கடவுள் மணியைக் குருவி தன் கூட்டில் இருளோட்ட வைத்ததை ஒத்ததெனக் கச்சியப்ப சிவாச்சாரியார் இரங்குகிறார்.

"காட்டில் எளிதுற்ற கடவுண்மணியைக் கொணர்ந்து
கூட்டில் இருளோட்டக் குருகுய்த்த வாறன்றோ
தீட்டு சுடர் வேற்குமரன் தேவியாந் தெள்ளமுதை
பூட்டு சிலைக்கையார் புனங்காக்க வைத்ததுவே"

நாம் நமது 'கூட்டுக்கு' விளக்கேற்றும் கைங்கரியமாகக் குருபரனைக் கொண்டா-டுகிறோம் என்பது அத்துணைப் பொருத்-தமில்லை. நாம் 'கண்ணே உறங்குறங்கு கார்வண்ணா நீ உறங்கு எண்ணேன் பிறதெய்வம் என் இதயத்தே உறங்கு' எனத் தாலாட்டுப் பாடிப் பரவுபவர்கள். நாம் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் அந்தக் கோயில் மூலத்தானத்தே குருபரனையே கண்டு வழிபடும் சீலம் மிக்கவர்கள். ஆயினும் அண்ட சராசரமெல்லாம் அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டிருக்கும் எங்கள் குருநாதனது மகத்துவத்தை எங்களால் உள்ளவாறே உணரமுடியவில்லை. மூவரும் தேவரும் முளைத்ததும் கண்ட அந்த மூவருக்கும் அறியவொண்ணாத குருபரன் முதன்மையை மூலைக்குள் இருந்து முணுமுணுக்கும் நம்மால் உணருதல் எவ்வாறு? மூவர்க்கும் முதல்வனாய், முண்டகமலர்பதம் கண்டு, அம்மலர்ப்பதமாகவே இருக்கும் எங்கள் குருமணி ஆராலும் விலைமதிப்பரிய அற்புதமணியேயாம். அவர் உலகெங்குமுள்ள உண்மைத் தேட்டமுடை-யோர்க்கெல்லாம் என்றைக்கும் அகப்படும் தெய்வமணி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Sivathondan

BE STILL

# Positive Thoughts

## *For Daily Meditation*

Don't surrender your liberty to anyone. Don't be deceived because one man says one thing and another says another thing.

It is wrong to kill a tiger in its forest, but you must kill it if it enters the village.

Descrimintae between the permanent and the perishable. Make the discrimination certain and then do well any work that you choose to do.

Continue to work. While you work you may do right and you may then do wrong. But you must continue to work.

The heights of life are more difficult to climb than the Himalayas. How numerous are the obstructions! Even towords the end the ego will raise its head.

Don't think of anything as unnecessary and don't think of anything as necessary either. Continue to work.

It is not proper to give up work. Fight! The world is a battlefiled. Accept anything that comes. Do not give up out of fear or pity.

Good thoughts and bad thoughts are twins.

The truth is one. The rest is illusion. Truth is betrayed by the first attempt at articulation.

You must realize the truth yourself. No It is wrong even to put it that way. How can we express something changeless and beyond the comprehension of the mind? The whole is the truth.

It is not enough just to be harmless. You must even be angry and assertive. Of what use is it if other people merely call you a good man?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REAL GURU & REAL SISHYA

Every soul is distained to be perfect, and every being in the end, will attain the state of perfection. Whatever we are now, is the result of our acts and thoughts in the past and whatever we shall be in the future, will be the result of what we think and do now. But this, the shaping of our own destinies, does not preclude our receiving help from outside; nay, in the vast majority of cases such help is absolutely necessary. When it comes, the higher powers and possibilities of the soul are quickened, spiritual life is awakened, growth is animated, and man becomes holy and perfect in the end.

This quickening impulse cannot be derived from books. The soul can receive impulses from another soul, and from nothing else. We may study books all our lives, we may become very intellectual, but in the end, we find we that we have not developed at all spirituality. It is not true that a high order of intellectual development always goes hand in hand with a proportionate development of the spiritual side in man. In studying books, we are sometimes deluded into thinking that thereby we are being spiritually helped; but if we analyse the effect of the study of books on ourselves, we shall find that, at the utmost, it is only our intellect that derives profit from such studies, and not our inner spirit. This inadequacy of books to quicken spiritual growth is the reason why, although almost every one of us can speak most wonderfully on spiritual matters, when it comes to action and the living of a truly spiritual life, we find ourselves so awfully deficient. To quicken the spirit, the impulse must come from another soul.

The person from whose soul such impulse come is called the Guru—the teacher; and the person to whose soul the impulse is conveyed is called the Sishya—the student. To convey such impulse to any soul from which it proceeds must process the power of transmitting it, as it were, to another; and, in the second place, the soul to which it is transmitted must be fit to receive it. The seed must be a living seed, and the field must be ready ploughed; and when both these conditions are fulfilled, a wonderful growth of genuine religion takes place. "The true preacher of religion has to be wonderful capabilities, and clever shall his hearer be" and when both of these are really wonderful and extraordinary, then will a splendid spiritual awakening result, and not otherwise. Such alone are the real teachers, and such alone are the real students, the real aspirants. All others are only playing with spirituality. They have just a little curiosity awakened, just a little intellectual aspiration kindled in them, but are merely standing on the outward fringe of the horizon of religion. There is, no doubt, some value even in that, as it may, in the course of time, result in the awakening of a real thirst for religion; and it is a mysterious law of nature that, as soon as the field is ready, the seed *must* and does come, as soon as the soul earnestly desires to have religion, the transmitter of the religious force *must* and does appear to help that soul. When the power that attracts the light of religion in the receiving soul is full and strong, the power, which answers to that attraction and sends in light does come as matter of course.

—Swami Vivekananda—

By the guru's grace my ego was destroyed.
By the guru's grace my heart became refreshed.
By the guru's grace true love grew up and flourished.
By the guru's grace the guru disappeared.

***-Natchinthanai-***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Spritual Story

## THE JNANI AND THE SIDDHA

*A story from Prabhulingaleela*

Prabhulinga, the founder of the Lingayat sect (now mostly prevalent in Karnataka State only), was touring the land for the uplift of the spiritually minded. He met the famous Yogi Gorakhnath in Gokarnam (a famous place of Hindu pilgrimage on the west coast of India). The yogi welcomed him respectfully, but was however, proudly conscious of his own extraordinary powers over the elements. He considered his guest more or less his equal, expressed pleasure at meeting him, and upon greeting him, asked who he was.

Prabhulinga replied that only the One who had destroyed his ego, root and branch, and who had thereby realised himself could know who he was, and wondered what he could say to a non-entity, a person, who clung to his perishable body.

Gorakhnath, who identified his body as himself, replied, "That person alone who has gained the immortality of the body, by the favour of Siva and consumption of *gulikas* (medicinal herbs), will never die. Therefore one who had not gained such immortality dies."

Prabhulinga remarked that knowledge consists in realizing one's Self and not in immortalising the body and went on to explain at length that the body cannot be the real Self. However, Gorakhnath could not be persuaded and would not budge an inch from his ground; he proudly challenged Prabhulinga to try cutting his body, handing him a long, bright and sharp sword. When the sword struck the body of Gorakhnath, it caused him no injury but was itself blunted. Prabhulinga feigned surprise, and asked Gorakhnath to try cutting his body. At first Gorakhnath hesitated to do so saying that Prabhulinga would die. But, when Prabhulinga insisted, he took up the sword and tried to cut his body. To the great surprise of Gorakhnath, the sword passed easily through the body of Prabhulinga without affecting it in any way. It was as if the sword was passing through empty space! Only then was Gorakhnath, the *Siddha*, ready to acknowledge the superiority of Prabhulinga, the *Jnani*. Thus, his pride was humbled, and he prayed to Prabhulinga, to teach him the truth. Prabhulinga then expounded *Brahma vidya* to Gorakhnath as follows: "Gorakhnath, do not think your body to be your Self. Seek the In-dweller (the cave-dweller) and you will once for all rid yourself of the disease of birth and death. The cave is your heart only, the In-dweller thereof is called God and I am That."

## Silence is the nature of Love

*"Come, draw thy nature within this inner world. Come—come upon the wings of ardent love for me. Is there or closer union than that between the Guru and disciple? O my son, O my son, Silence is the nature of Love—Inexpressibility. And deep within the deepest folds of Silence there is God. Abandon all outer concerns. Whithersoever I go, do thou come! Whithersoever I become, do thou likewise become. O for the Holiness of God! Many are the shrines of the devotee's heart where thought, like incense, rise unto God. Spiritualise everything thou doest. See the Brahman, the Divinity in form as well as in the Formless. Than the Lord there is no greater good.*

-In the Hours of Meditation-



**God will tell us everything. Let us not worry about anything.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE SAIVA SAINTS

## 4. Saint Iyat Pahai Naayanar

To shed the smaller ego and realize the greater Self, the divi-nity within, everyone goes through a different discipline. There may be meeting points but the paths are not the same. Every saint has worked out his "salvation" with the same assiduity, but each in a different manner. They have evinced the same passionate all consuming love for the Great Truth-the Shiva Shankara of our hearts; no less fervent has been these saints self - obliter-ating love for all true devotees of the Lord, for are they other than He? Yet the occasions, when the last chains that held these saints earth-bound snapped, have been strikingly different for each of them.

Puhaar (otherwise known as Kaveripoompattinam) was the capital of the Chola Kingdom and became renowned under the rule of kings of Anapaayan's dynasty. There was here a sacred confluence of the river Kaveri with the sea. In this town, there lived a merchant prince called Iyat Pahai. He led a life opposed to the way of the world. Yet he never failed in his service of the Lord. He would not refuse anything the Lord's devotees asked of him. He would carry out the behests of all devotees smeared with the holy ash. His wife too thought and felt like her lord and they had but one will between them. Theirs was thus an ideal married life.

One day a Brahmin came to their house. He wore the holy ash over his body. But he looked very lascivious. The merchant saw him. He received him, washed his feet, strews flowers at his feet and worshipped him. "In what manner am I blessed this day?" asked the merchant.

"It is said that you give everything the Lord's devotees would wish to have and that you would refuse them nothing. I came to you to ask you a certain thing. Will you give it to me without saying nay?" "I shall certainly give anything I have. Whatever belongs to my humble self is the property of the Lord's devotees". "I came here to have your wife." When the merchant Iyatpahaiyaar heard these words, he did not refuse. Neither was being taken aback. Cheerfully he said "Oh you have asked me what I do have and can offer at your holy feet. Great indeed is your grace." Then he went into his house and carefully broke to his wife what he had agreed to do. She shuddered and was sorely troubled. She recovered soon and said, "Have I any other rights? Let your will be mine too" and worshipped him.

Iyatpahai was extremely glad. As she now belonged to the Lord's devotee, he too in turn worshipped her and looked at her with gratitude. His wife went up to the lewd Brahmin and bowed down: Iyatpahai worship-ping the Brahmin begged him to let him know what he could do further. "You must accom-pany me till I, with the lady, pass your relatives and the town" said the Brahmin, "I should have thought about this minor obli-gation myself and should not have waited for the great Brahmin to ask of me," he told himself. "I shall come this instant, Lord," he said and went into his house.

He came out in a warrior's dress, with sword and shield. He sent the two ahead and himself went in the rear. The news spread among his kins-men. "Iyatpahai may be mad. But how can





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

this wicked fellow of a Brahmin take away his poor chaste wife?" they said angrily. "We shall rid ourselves of this disgrace". They set out with javelins, bows, swords and shields. They came and surrounded the three. "Stop you who should perish. Leave behind our girl and go," they shouted.

The Brahmin looked as if he was afraid and turned towards the woman. "Lord fear not. He will win", said she. Iyatpahai con-soled "Don't be disheartened. I shall hew them down to the ground." Then with anger flashing from his eyes, he ordered them in a thunderous voice to flee at once or be cut asunder and die in anguish. "Fool" they said "What are you doing and saying? The whole country will laugh. Enemies will scoff. You give away your wife to a Brahmin and talk of valour. "We shall die here, all, of us; but never shall we permit her to be taken away."

He roared like a tiger, which had been attacked. "Then I shall slay you and send them," he said and leapt with his sword among those that tried to stop them. There was great slaughter. He hewed down those who came in groups, those who came single and those who came from different directions. He stood alone and fought till there was no one left in the field.

"Now you can go fearlessly. I shall come with you till you pass the forest," said Iyatpahai. The three reached Saikaadu. "You may now return", said the Brahmin. The merchant fell at his feet, worshipped him and said, "I have been blessed this day" and turned back the way he came.

The Brahmin turned and looked with love and grace at the receding form of Iyatpahai. "There goes the pure - hearted one," he thought to himself. Iyatpahai had not gone far. He heard the Brahmin crying out.

"Oh holy sage Iyatpahai gives me refuge
Do come at once and give me refuge
Ever watchful one give me refuge
Oh my friend give me refuge
Thou who had accomplished deed so rare
Great hero, give me refuge."

"I come Lord, I come. I shall not suffer those who have wronged you to get a way" and came running back. But there was no Brahmin. Only the lady stood there. He saw in the sky the Lord with His Con-sort mounted on the Bull of Dharma. The Great Wisdom who eludes the grasp of those seeking him in various ways but who dances openly in *Tiru-Chitampalam* for his true devotees to behold, had come to him in that Brah-min's form.

Iyatpahayaar with hands clasped fell on the ground, rose and praised.

"Long may thou live, I know not what to say
Praise to the form that came
Thou who came of thy own accord and made
a servant of me, praise to thee,
Thou who granted me boundless
flood of bliss, praise to thee,
The beautiful feet that dance at
*Thillai-ampalam* praise to thee".

"Come with me and enter into the Infinite Bliss with you wife" said the Lord. The gods praised and showered flowers. The merchant's kinsmen too, who had died attained a high state of bliss.

"Slave I am of Iyatpahai who wouldn't refuse aught or say nay".





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவதொண்டன் சபை வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 01. | நற்சிந்தனை 5ஆம் பதிப்பு | 150.00 |
| 02. | NATCHINTHANAI (English Edition) | 400.00 |
| 03. | நற்சிந்தனைக் கீர்த்தனைகள்-சாதாரண பதிப்பு | 12.00 |
| 04. | பெரிய புராண வசனம் | 300.00 |
| 05. | யோகசுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் (2ஆம் பதிப்பு) | 250.00 |
| 06. | என்நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோகசுவாமிகள் | 50.00 |
| 07. | நமச்சிவாய மாலை | 35.00 |
| 08. | தியானகாலச் சிந்தனை (புதிய மூன்றாம் பதிப்பு) | 35.00 |
| 09. | யோகசுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு) | 50.00 |
| 10. | சிவத்தியானமாலை (உரையுடன்) | 20.00 |
| 11. | தாயுமானசுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும் | 200.00 |
| 12. | தாயுமானசுவாமிகள் பாடல் (மூலம் மட்டும்) | 80.00 |
| 13. | சைவத் திருமுறைத் திரட்டு (புதிய மூன்றாம் பதிப்பு) | 150.00 |
| 14. | HOMAGE TO YOGASWAMY | 10.00 |
| 15. | சண்முக கவசம் | 25.00 |
| 16. | முருகன் திருப்பாடற் திரட்டு | 25.00 |
| 17. | ஈழத்துத் திருப்புகழ் | 50.00 |
| 18. | சர்வஞானோத்தர ஆகம ஞானபாதவசனம் | 50.00 |
| 19. | திருவாசகம் | 220.00 |
| 20. | சிவதொண்டன் - செந்தமிழ் ஆங்கில திங்கள் வெளியீடு | |
| | ஆண்டுச் சந்தா a) உள்நாடு ரூபா | 400.00 |
| | b) வெளிநாடு US $ | 14.00 |

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பில் பெறும் இடம்
திரு. மா. திலகரத்தினம்
25/A, பாமன்கடை ஒழுங்கை,
கொழும்பு - 06.
தொலைபேசி : 0112 - 365102

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக்கட்டளை, தபாற் கட்டளை, காசோலை முதலியன அனுப்பவேண்டிய பெயரும் விலாசமும்.
Cheque, Drafts and Money Orders should be drawn in favour of Sivathondan Society
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.


Bilingual Monthly, Registered at the G. P. O, as News Paper.
No: R. B. N. 782/1961
a) Printer : Astraluxumi Publication
320, Sea Street,
Colombo - 11.
b) Publisher : P. Rajarathnam
c) Published for : Sivathondan Society Ltd.
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
T.P: 021 - 2222799
Date of Publication : 1st April 2010
Editor: S. Vinasithamby B.A (Hons)
Sivathondan Nilayam,
Chenkalady.
T.P: 065 - 2240272


If undelivered please return to:
The Manager, "Sivathondan Nilayam"
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.

Public Library
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org